வீடியோ கமரா,
T. V. வீடியோ டெக்
ஆகியவற்றை
உத்தரவாதத்துடன்
உடனுக்குடன்
திருத்திக் கொள்வதற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

பக்கங்கள் ஆறு

உதயன்

Registered as a Newspaper

விலை
ரூபா
5-00

மலர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 15 புதன்கிழமை (29- 06 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 213

உங்கள் இல்லங்களில்
நிகழும்
மங்கள நிகழ்வுகளை
நவீன முறையில் வீடியோ
படப்பிடிப்பிற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

வடக்கில் வாக்களிப்பு நிலையங்கள்; ஒன்றிணைக்க முயன்றால் வழக்கு!

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி முடிவு

கொழும்பு, ஜூன் 29

வடபகுதியில் வாக்களிப்பு நிலையங்களை ஒன்று சேர்த்து தேர்தலை நடத்தும் அரசின் திட்டத்தை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர சுதந்திரக் கட்சி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதனை அனுமதிப்பது தேர்தலில் மோசடிகள் இடம்பெறுவதற்கு உதவுவதாக முடியும் என்று சட்ட நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சட்ட நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு முன்னர் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து இது பற்றி முறையிடுவது என்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தீர்மானித்து உள்ளது.

வடபகுதியில் தேர்தலை நடத்துவது குறித்து தேர்தல் ஆணையாளர் விளக்கமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்கள் சிலவற்றை இராணுவ முகாம்களுக்கு அருகில் நிறுவியதன் மூலம் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு பயப்பட்டனர்

(6ஆம் பக்கம் பார்க்க)

ஐ.தே.கவுடன் கூட்டுவைப்பதா? திரிசங்கு நிலையில் இ.தொ.கா.!

கொழும்பு, ஜூன் 29

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் நிலை இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு ஜனாதிபதி முடிவுசெய்தது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாகவும்—

அதனை அடுத்தே எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையாது தனித்து சுயேச்சைக் குழுவாக போட்டியிடுவது என்ற யோசனையை இ.தொ.கா. தலைமைப்பீடம் தீவிரமாக பரிசீலனை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் இரண்டாம் திகதி கூடும் இ. தொ. காவின் தேசியசபைக் கூட்டத்தில் இது பற்றி முடிவெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

17 ஆண்டுகளாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் கொண்டிருந்த இணைப்பைத் தொடருவதா இல்லையா என்பது குறித்தும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்றும் தெரிகிறது.

"ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவோம் அல்லது தனித்துப் போட்டியிடுவோம் ஆனால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடமாட்டோம்"— என்று அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எதிர்வரும் தேர்

(6ஆம் பக்கம் பார்க்க)

இ. தொ. காவை வளைக்க ஐ.தே.க. தலைவர்கள் முயற்சி!

கொழும்பு, ஜூன் 29

ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடும்படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை இணங்க வைக்கும் முயற்சியில் ஐ. தே. க. தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிகிறது.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்ற செயலகத்தில் வைத்து அமைச்சர் தொண்டமானுடன் இது தொடர்பாக ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா பேச்சுவார்த்தை நடத்தினார். அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவும் தொண்டமானுடன் கடந்த ஞாயிறு பேசவிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேரம்பேசும் நிலையில் இ. தொ. கா. இருப்பதாக இப்போது தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ)

சந்திரிகாவை இழிவுபடுத்தும் விதத்தில் சுவரொட்டிகளாம்!

பிரசாரத்துக்கு 60 பாதாள உலக கிரிமினல்களும் தயார்!!

தம்மை இழிவுபடுத்தும் சுவரொட்டிகளை நாடு முழுவதிலும் ஒட்டுவதற்கு ஆளும் கட்சி தரப்பினர் திட்டமிட்டிருப்பதாக சுதந்திரக் கட்சிப் பிரதித் தலைவர் சந்திரிகா குமாரணதுங்க குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

நிர்வாணமான நிலையில் எடுக்கப்பட்ட பெண்களின் புகைப்படங்களில் தமது தலையை ஒட்டுவதன் மூலம் தாம் நிர்வாண கோலத்தில் இருப்பதாக அச்சிடப்பட்ட சுவரொட்டிகள் மிகப் பிரபலமான அரசியல்வாதி ஒருவரின் வீட்டில் அறையொன்றினுள் வைக்கப்பட்டிருப்பதாக 49 வயது விதவையான சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு முடிந்த பின்னர் இச் சுவரொட்டிகளை நாடு முழுவதும் ஒட்டத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பஸ்களில் பயணம் செய்பவர்கள் மத்தியிலும் மற்றும் பொது இடங்களிலும் சந்திரிகாவை இழிவுபடுத்துவது போன்ற கதைகளை பரப்புவதற்கு சுமார் 60 பாதாள உலக கிரிமினல்களைப் பயன்படுத்தவும் ஆளும் கட்சி தரப்பில் திட்டமிடப்பட்டிருப்பதாக சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

பாரிய ராணுவ நடவடிக்கை தற்போதைக்கு இல்லை?

முப்படை உயர் பீடத்தில் தளர்வு நிலை

வடபகுதி மீது இப்போதைக்கு பாரிய அளவிலான இராணுவ நடவடிக்கை எதனையும் மேற்கொள்வதில்லை என பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற உயர் அதிகாரிகள் மாநாட்டில் கொள்கை அளவில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது.

கடந்தவாரம் இராணுவத் தலைமை அலுவலகத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் பெரிடி சில்வா உட்பட முப்படைகளின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வடபகுதி யுத்த நிலைமை எப்படி? எப்போது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இராணுவத் தளபதியிடம் பத்திரிகையாளர்கள் கேட்டனர் என்றும்—

'யுத்தத்தைப் பற்றி பிறகு பார்ப்போம்' என்று மட்டும் கூறிவிட்டு பத்திரிகையாளர் மாநாட்டில் இருந்து அவர் மெதுவாக விடைபெற்றுச் சென்றுவிட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத் தலைமையகத்தின் தற்போதைய போக்கை உற்று அவதானிக்கும்போது வடபகுதி மீது இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளும் எண்ணம் தற்போதைக்கு அவர்களிடம் இல்லை என்பதை தெரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது என்றும்—

யுத்த நடவடிக்கையில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா வடபகுதி மீதான பாரிய இராணுவ நடவடிக்கைக்கு பச்சைக் கொடி காட்டாமல் இருப்பது இராணுவ உயர் பீடத்தில் சற்று தளர்வு நிலை ஏற்பட்டிருப்பதையே காட்டுகிறது என அந்[illegible]ரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ)

தமிழ்க் குழுக்கள் தேர்தலில் தனித்தனியே போட்டியிடும்?

கொழும்பு, ஜூன் 29

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பில் இயங்கும் தமிழ்க் குழுக்களும், தமிழ்க் கட்சிகளும் தனித்தனியாகவே போட்டியிடும் எனக் கூறப்படுகிறது.

அவை ஒன்று சேர்ந்து ஒரே அணியில் போட்டியிடுவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை என்று அறியப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திரு இரா. சம்பந்தன், திரு. அ. தங்கத்துரை ஆகியோர் திருகோணமலை மாவட்டத்திலும் —

(6ஆம் பக்கம் பார்க்க)

வடக்கில் தேர்தல் நடத்தப்படாவிட்டால் காபந்து அரசே தொடரும் நிலை வரும்

நாடாளுமன்றம் கலைக்கப்பட முன்னரே பிரதமர் ரணில் எச்சரித்தார்

கொழும்பு, ஜூன் 29

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது நாட்டின் சில பகுதிகளில் தேர்தல் நடத்தப்படாத பட்சத்தில் தேசியப்பட்டியல் மூலம் எம். பிக்களை நியமனம் செய்ய முடியாது என்றும் —

எந்தக் கட்சியும் அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியாத நிலைமையை இது ஏற்படுத்தும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இப்படியான முட்டுக்கட்டை நிலை ஏற்படுமானால் இம் முட்டுக்கட்டை நீக்கப்படும் வரை காபந்து அமைச்சரவையே தொடர்ந்து செயல்பட வேண்டியேற்படும் என்றும் பிரதமர் கூறியிருக்கிறார்.

தேர்தல் ஆணையாளரின் அறிக்கை பற்றிய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் பிரதமர் இத்தகவலை வெளியிட்டார்.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் இக்கூட்டம் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் எதிர்நோக்கும் முட்டுக்கட்டைகளை நீக்குமுகமாக, தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப... நிலக்கட்சிக் காரருக்கு எதிரா நீலப்படம் போலை....!

எதிரணி சார்பில் சிறிமானி கொழும்பில் போட்டியிடுவார்

கொழும்பு, ஜூன் 29

திருமதி சிறிமானி அத்துலத்முதலி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர்கள் போட்டியிடுவது தொடர்பாக லலித் அணி, தலைவரான சிறிமானி அத்துலத்முதலி சுதந்திரக் கட்சிப் பிரதித் தலைவர் சந்திரிகாவுடன் பேச்சுக்கள் நடத்தி வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவாக மேல் மாகாணசபையில் செயல்படும் — ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த — 10 உறுப்பினர்களும் மேல் மாகாணத்தில் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் மாவட்டங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர்களாக நிறுத்தப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது

[உ-எ]

கிளாலி சேவை இன்று நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

கிளாலி - பூநகரிப் படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்

(உ-3)

ம. எண்ணெயுடன் மாஹோ வந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். மாவட்டத்துக்கு 8 ஆயிரம் பரல் மண்ணெண்ணெயுடன் 'மாஹோ' கப்பல் நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

யாழ். மாவட்டத்திலுள்ள உத்தரவுபெற்ற எரிபொருள் முகவர்களால் இந்த மண்ணெண்ணெய் எடுத்துவரப்பட்டுள்ளது.

(ஒ-3-173)

ஐ. தே. க. தோற்கும் என டி.பிக்கு விளக்கப்பட்டது

கொழும்பு, ஜூன் 29

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் தூக்கி எறிந்து விடும் உண்மையான ஆபத்து ஏற்பட்டிருப்பதாக ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

இம்மாத ஆரம்பத்தில் ஜனாதிபதி விஜேதுங்காவைச் சந்தித்து தீவிர ஆலோசனை நடத்திய அவரது நெருங்கிய ஆலோசகர்கள் முன்கண்ட எச்சரிக்கையை விடுத்தனர் என்று "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது.

எனினும் அதன் பின்னர் வேறு சில ஆலோசகர்கள் தெரிவித்த யோசனையின் பேரிலும்—

சோதிடர்கள் தெரிவித்த ஆலோசனையின் பேரிலுமே— ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை அறிவித்தார் என்று கூறப்படுகிறது (அ-எ)

தேர்தலை முன் கூட்டியே நடத்தும்

விஜேதுங்காவின் முடிவு தற்கொலைக்கு ஒப்பானது

காமினி திஸநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 29

நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவது என்ற ஜனாதிபதி விஜேதுங்காவின் முடிவு தற்கொலைக்கு ஒப்பானது.

அமைச்சர் காமினி திஸநாயக்கா இப்படிக் கருத்து வெளியிட்டார்.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முதல் நாள் காமினி திஸநாயக்கா நாடாளுமன்றத்தில் சுதந்திரக்கட்சி எம். பியான சி. வி. குணரத்னாவின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில்— நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்றார்.

எனினும்— ஜனாதிபதியின் முடிவை அறிந்த பின்னர் நாடாளுமன்ற 'லொபி'யில் காணப்பட்ட எம். பிக்களுடன் உரையாடியபோது, "இம் முடிவு தற்கொலைக்கு ஒப்பானது" என்றார்.

"சண்டே ஐலண்ட்" பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில்—

நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தும்படி நான் ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்யவில்லை— என்று காமினி திஸநாயக்கா கூறினார்.

"நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதானால் ஏற்படக்கூடிய சாதக, பாதகங்களை மட்டும்தான் நான் ஜனாதிபதிக்கு கூறினேன்"— என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-எ)

டி. பியின் போக்கு குறித்து பிரதமருக்கும் அதிருப்தி!

கொழும்பு, ஜூன் 29

ஜனாதிபதி விஜேதுங்க சில அரசியல் முடிவுகளை எடுத்தபோது தம்மைக் கலந்தாலோசிக்கவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிருப்தி வெளியிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏன் தம்மை கலந்தாலோசிக்க ஜனாதிபதி தவறிவிட்டார் என்று ரணில் ஆச்சரியப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அரசுத் தலைமைக்கும் பிரதமருக்கும் இடையில் இடைவெளி ஏற்பட்டதாகவும்—

[illegible] நீங்களே தேர்தல் பிரசாரங்களுக்குத் தலைமை வகித்து [illegible] ரணிலுக்கு ஜனாதிபதி [illegible] என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ)

நாடாளுமன்றத் தேர்தல்:

படை உயரதிகாரிகளும் போட்டியிட முண்டியடிப்பு

கொழும்பு, ஜூன் 29

பொலீஸ் மற்றும் இராணுவம் ஆகியவற்றில் உயர் பதவி வகிக்கும் அதிகாரிகள் பலர் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் வேட்பாளர்களாக போட்டியிட இந்த அதிகாரிகள் சம்பந்தப்பட்ட கட்சிகளின் பொதுச் செயலாளர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளனர் என்று "லங்காதீப" வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதனால் வேட்பாளர்களை தெரிவு செய்யும் வேளையில் இரு கட்சிகளுக்கும் இக்கட்டான நிலை ஏற்பட்டு இருப்பதாக, இரு கட்சிகளின் பொதுச் செயலாளர்கள் "லங்காதீப" பத்திரிகைக்கு தெரிவித்தனர்.

(உ-எ-6)

ஹேமா ஒப்படைத்த ரூ. 1 கோடி என்னவாயிற்று?

டி.பியிடம் பதவி விலகிய எம் பி கேள்வி

கொழும்பு, ஜூன் 29

பிரேமதாஸா மறைந்த பின்னர் ஹேமா பிரேமதாஸா ஐ. தே. க. பொதுச் செயலாளரிடம் ஒப்படைத்த ஒரு கோடி ரூபாவுக்கு என்ன நடந்தது?

ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு அனுப்பிய பதவி விலகல் கடிதத்தில் முன்னாள் எம். பியான காலிங்க ஒபேவன்ஸ இக்கேள்வியை எழுப்பியிருக்கிறார்.

1993 ஆம் ஆண்டு நடந்த மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட்ட ஐ. தே. க. வேட்பாளர்களுக்கு வழங்கப்படுவதற்காக தலா 25 ஆயிரம் ரூபா பணம் வைக்கப்பட்டிருந்த 400 கடித உறைகள் ஐ. தே. க. பொதுச் செயலாளரிடம் ஹேமா பிரேமதாசாவினால் ஒப்படைக்கப்பட்டன.

அந்த ஒரு கோடி ரூபாவுக்கு என்ன நடந்தது? இது இரகசியமாக மூடிமறைக்கப்பட்டுவிட்டது. இச்செயல் கட்சியின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தி உள்ளது"— என்றும் அவர் தமது கடிதத்தில் கூறியிருக்கிறார்.

நாட்டுத் தலைவராக மக்களுக்கு சேவையாற்றக் கூடிய வல்லமை ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு இல்லை இதனை

(6ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு நகரில் தொடரும்

தமிழர் மர்மக் கடத்தல்; புலனாய்வுப் பிரிவு பின்னணி

கொழும்பு, ஜூன் 29

கொழும்பில் தொடர்ந்தும் தமிழர்கள் மர்மமான முறையில் கடத்தப்படும் சம்பவங்களுக்கு ஸ்ரீலங்காவின் இராணுவ புலனாய்வுத்துறையினர் பின்னணியில் இருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த மர்மக்கடத்தல் குழுவுக்கு இராணுவ புலனாய்வுத் துறையைச் சேர்ந்த பிரிகேடியர் பலதல்ல தலைமை வகிப்பதாகவும் —

இக்குழுவில் தமிழ்தேச

(6ஆம் பக்கம் பார்க்க)

BASIC ENGLISH

BY WELL EXPERIENCED TEACHER
ON MONDAYS, WEDNESDAYS & FRIDAYS
4-00 — 5-00
Fees Rs 75/- per month
COMMENCEMENT: 04 — 07 — 1994

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3rd CROSS STREET,
JAFFNA.
[C-8561]

UNIVERSITY OF JAFFNA SHRI LANKA

EXTERNAL EXAMINATION 1992/93

GENERAL DEGREE ARTS PART I AND II
SPECIAL DEGREE ARTS - PART I AND II
BACHELOR OF COMMERCE DEGREE-PART I AND II

Examination Entry forms will be received from registered candidates, whom wish to sit the above examination scheduled to commence in August/ September / October 1994.

Examination Entry forms could be obtained from the External Examinations and Registration University of Jaffna in person or by post from 01-07-1994.

Those who wish to obtain the forms in person are required to produce a receipt from the Manager People's Bank located in the University of Jaffna for the payment of Rs. 15/- Those who wish to obtain the forms by post are required to send a money order / postal order for 15/- drawn in favour of Bursar, University of Jaffna together with a self addressed envelope affixing stamp to the value of Rs. 12/-

Completed Examination Entry forms should be submitted to the External Examinations and Registration unit on or before 31st. July 1994.

— REGISTRAR.
University of Jaffna. (C-8556)

இளங் கலைஞர் மன்ற
மாதாந்த
இசை நிகழ்ச்சி

ஆதரவு:
ஈழநாதம் மக்கள் தினசரி நிறுவனம்
இடம்: மன்றக் கலாமண்டபம்,
சட்டநாதர் வீதி நல்லூர்
காலம்: 30-06-1994 வியாழன்
மாலை 5 மணி

நிகழ்ச்சி நிரல்
மாலை 5-00 — 5-20 பாட்டு:
அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற மாணவிகள்
செல்விகள்:
க. ஸ்ரீதேவி, செ. அனுசியா, சி. விநோதினி, நா. சசிகலா, க. ஸ்ரீரஜனி, ஆ. சுபாஷினி, த. அம்பரசி, ஆ. சிவகௌரி, சி. சிவரஞ்சனி, ப. பகீரதி.
செல்வி ஞானேஸ்வரி பரமு — வயலின்
செல்வன் க. மயூரன் — மிருதங்கம்
5-20 — 5-50 வயலினிசை:
செல்வி சந்தானலக்ஷ்மி அப்பாத்துரை — வயலின்
திருமதி கானகோகிலம் ஜெயம் — மிருதங்கம்
5-50 — 6-30 வீணையிசை
திருமதி மலர்விழி கனகசபை — வீணை
திரு. எஸ் கண்ணதாசன் — மிருதங்கம்
திரு. இ. சிவசீலா — கடம்
6-30 — 7-30 இசைக்கச்சேரி:
செல்வி வி. விமலாதேவி — பாட்டு
திரு. ஆர். எஸ் கேசவமூர்த்தி — வயலின்
திரு. கே. கண்ணதாசன் — மிருதங்கம்
எம். சுஜன் — கடம்
7-30 — 8-00 மங்களவிளக்கேற்றல்:
திரு க. முருகதாஸ் அவர்கள்
பொதுமுகாமையாளர் "ஈழநாதம்"
திரு. க. பாஸ்கரன் அவர்கள் (ஸ்தபதியர்)
தலைமையுரை:
இரா. செல்வவடிவேல் ஆசிரியர் அவர்கள்
பிரதம விருந்தினர் உரை:
வைத்தியகலாநிதி இ. தெய்வேந்திரன் அவர்கள்
(சுகாதார வைத்திய அதிகாரி, யாழ். மாநகராட்சி மன்றம்)
வைத்தியகலாநிதி
திருமதி செங்கமலம் தெய்வேந்திரம் அவர்கள்
(யாழ். போதனா வைத்தியசாலை)
8-00 — 9-00 சிறப்பு நிகழ்ச்சி
பரதநாட்டியம்
நாட்டியக்கலைமணி
செல்வி இராஜாம்பிகை நடராஜா அவர்கள்
திருமதி பத்மரஞ்சனி உமாசங்கர் — நட்டுவாங்கம்
இசைக்கலைமணி
வர்ண இராமேஸ்வரன் — பாட்டு
இசைக்கலைமணி S. கோபிதாஸ் — வயலின்
பிரம்மஸ்ரீ ம. தாணுநாதசர்மா — புல்லாங்குழல்
கலா ரசிகர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்!
— மேற்படி மன்றத்தினர்,
[இ-8559]

தென் இலங்கை அரசியலை நிர்ணயிக்கும் சக்தி பிரபா

'சண்டே ஐலண்ட்' விமர்சனக் கட்டுரை

கொழும்பு, ஜூன் 29
தென்னிலங்கை அரசியலின் போக்கும் ஆழமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் அரசியல் தென் இலங்கை அரசியலை நிர்ணயிக்கும் சக்தியாக உள்ளது:

சண்டே ஐலண்ட் பத்திரிகையில் 'அக்னி' என்பவர் எழுதிய விமர்சனக் கட்டுரையில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்இலங்கைத் தலைமைத்துவத்தினால் தெளிவான இராணுவ அல்லது அரசியல் தந்திரோபாயம் ஒன்றை உருவாக்க முடியாத காரணத்தினால், தென் இலங்கை அரசியலை நிர்ணயிக்கும் சக்தியாக பிரபாகரன் விளங்குவது வெட்ட வெளிச்சமாகி வருகிறது.

இராணுவ மற்றும் அரசியல் தந்திரோபாயம் ஒன்று அரசிடம் இல்லாததினால் - முதலாவது ஈழம்யுத்தம், இரண்டாவது ஈழம் யுத்தம் ஆகியன இலங்கை ஆயுத படையினருக்குப் பேரழிவாக முடிந்துள்ளன.

தேசியத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு, தேசிய நோக்கு தேவை. அடுத்த டிசம்பரில், அடுத்த ஐந்து ஆண்டுகளில் அல்லது அடுத்த பத்து ஆண்டுகளில் இலங்கை எப்படியிருக்க வேண்டும் என்பதான தேசிய நோக்கு தேவை.

ஆனால் இலங்கை அரசியல் தலைவர்கள் மரபார்ந்த ரீதியில் சிந்திக்கின்றனர். அதிகாரவர்க்கம் நாளாந்த ரீதியில் சிந்திக்கின்றது. யுத்தத்தை நடத்தும் விஷயத்தில் கூட கட்சிகளுக்குள் ஒற்றுமையில்லை.

வடக்கு -கிழக்கு யுத்தத்தை 3 மாதங்களில், 6 மாதங்களில் முடித்து விட முடியாது. இப்போது தேர்தல் சமயமான படியால் - "நாம் பதவிக்கு வந்தால் ஆறு மாதங்களில் யுத்தத்தை முடிப்போம்" — என்று அரசியல்வாதிகள் கூறக்கூடும்;

நிபந்தனையுடன் இந்திய இராணுவத்தை அழைத்தால் அல்லது இலங்கை இராணுவம் மற்றும் பாதுகாப்பு அமைச்சகம் இணைந்து செயலாற்றினால் ஒழிய உறுதியடைந்த விடுதலைப் புலிகள் தமிழ் ஈழத்தை அடைவதை நெருங்கிவிடுவார்கள்.

விடுதலைப் புலிகள் தொடர்பாக அரசாங்கத்திடம் நிலையான கொள்கை ஒன்று இல்லாததால் விடுதலை புலிகளுடனான போரில் தாங்கள் கஷ்டப்படுவதாக இராணுவ உயர் பீடத்தில் உள்ள, பற்றுக் கொண்ட இராணுவ அதிகாரிகள் தங்கள் கவலையை மௌனமாக தெரிவித்து வருகின்றனர்.

இந்தியப்படை வந்தாலும் 20 வருடம் செல்லும்

இந்தியப் படைகள் அழைக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் கூட விடுதலைப் புலிகளை ஒழிக்க 10 முதல் 20 வருடங்கள் எடுக்கும் என்று வெளிநாட்டு இராணுவ மதிப்பீடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது;

அரசியல் பேச்சுக்களுக்கு வரக்கூடிய நிலையை ஏற்படுத்தும் அளவுக்கு விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தலாம் என்றே இலங்கை இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். இப்படி அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 29
புங்குடுதீவு சித்தி விநாயகர் மகா வித்தியாலயமும் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயமும் இணைந்து நடத்தும் பாடசாலை மட்ட ஆங்கில தினப்போட்டி ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் இன்று நடைபெறும். (ஓ)

* * *

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியல் சமூகம் ஏற்பாடு செய்துள்ள சமயத்தின் சமூகவியல் தொடர்பான ஆய்வரங்கம் இன்று பிற்பகல் 3மணிக்கு முகாமைத்துவ விரிவுரை மண்டபத்தில் நிகழவுள்ளது.

சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் என். சண்முகலிங்கனின் தொடக்க உரையினைத் தொடர்ந்து. வண. கலாநிதி டொமினிக் ஏ. ஜோசப் 'புதிய சமயகுழுக்களின் தோற்றமும்! அவற்றின் சமூகப் பின்னணியும்' எனும் பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார்: ஆர்வலர்கள், சமய சமூகவியல் ஆய்வு மாணவர்கள் அழைக்கப்படுகின்றனர். (ஓ)

* * *

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் மாதாந்த பொதுச்சபைக் கலந்துரையாடல் இணைய அங்கத்துவ நிறுவனங்களின் பணிமனைகளில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது

இதற்கு அமைவாக இம் மாதத்திற்கான கலந்துரையாடல் 'கெயர்' நிறுவனத்தின் பணிமனையில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். (ஓ 162)

* * *

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் சாவகச்சேரி பிரிவினால் நடத்தப்படும் உயர்தர மாணவர்களுக்கான பிரயோக கணித பாடத்திற்கான வினா விடை பயிற்சி வகுப்புகள் இன்று (புதன்) பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (ஓ 31)

* * *

உரும்பராய் இந்துக் கல்லூரியின் பரிசு நாளும், ஸ்தாபகர் விழாவும் இன்று புதன் மாலை 4 மணிக்கு கல்லூரி அரங்கில் அதிபர் திரு. இ. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

வலயம் 2இன் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஓ)

* * *

யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறையின் சமூக விஞ்ஞான மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள— "எமது பிரதேசத்திற்கு உகந்த அபிவிருத்தி நோக்கு" என்ற தலைப்பிலான— கருத்தரங்கு இன்று புதன் பிற்பகல் 3.00 மணியளவில் பொருளியற்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

பேராசிரியர் என். நவரத்தினராசா கருத்துரை ஆற்றுவார். (ஓ)

அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி, ஜூன் 29
தென்மராட்சி கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்கள் கூட்டம் நாளை வியாழன் பி. ப. 1 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும். (ஓ-117)

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் ப. நோ. கூ. சங்கங்களின் நெறியாளர் சபை உறுப்பினர்கள், தலைவர், பொது முகாமையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழன் காலை 9 மணிக்கு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

செயன்முறைக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 29
எதிர்வரும் ஜூலை மாத பிற்பகுதியில் நடைபெறவுள்ள தமிழீழ பொதுக் கல்வித் தேர்வின் செயன்முறைத் தேர்வுகள் தொடர்பாக —

செயன்முறைத் தேர்வுக்கான பாடங்களின் முதன்மை ஆசிரியர்களுக்கு விளக்கமளிக்கும் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக —

தொழில் நுட்பப் பாடங்களுக்கான முதன்மை ஆசிரியர்களுக்குரிய விளக்கக் கருத்தரங்கு இன்று புதன் பிற்பகல் 2 மணிக்கும் —

அழகியல் பாடங்களுக்கான விளக்கக் கருத்தரங்கு அடுத்த மாதம் 6 ஆம் திகதி காலை 9 மணிக்கும் நல்லூரில் உள்ள கல்வித் திணைக்கள தேர்வுக் கிளை மண்டபத்தில் நடைபெறும்.

விஞ்ஞான பாடத்துக்கான விளக்கக் கருத்தரங்கு அடுத்த மாதம் 8 ஆம் திகதி காலை 9 மணிக்கு கனகரத்தினம் ம. ம. வித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ் மாவட்டத்தின் இரு கல்வி வலயங்களையும் சேர்ந்த முதன்மை ஆசிரியர்களை மேற்படி கருத்தரங்குகளில் பங்கு பற்றுமாறு தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார். (இ-5)

ஆலயங்களில்

வட்டுக்கோட்டை மேற்கில் உள்ள முருகையா கோயில் வருடாந்த உற்சவம் இன்று 29 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஜூலை 8 ஆம் திகதி வரை நடைபெறும். திருவிழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகள் இடம் பெறும். (ச)

* * *

வடமராட்சி, ஜூன் 29
துன்னாலை வடக்கு மித்திரன் அம்மன் கோயில் மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்று புதன்கிழமை நடைபெறும். (ஓ-173)

* * *

வடமராட்சி, ஜூன் 29
பருத்தித்துறை- புலோலி பசுபதீஸ்வரர் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அடுத்த மாதம் 13 ஆம் திகதி ரதோற்சவமும், 14 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

மஹோற்சவ நாட்களில் சிவ. வை. நித்தியானந்தசர்மா மகாபாரதம் பற்றி தெய்வீக இசை சொற்பொழிவு நிகழ்த்துவார் (ஓ-173)

* * *

வண்ணை கலட்டி அற்புத விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 5.30 தொடக்கம் 6.30 மணிவரையும் உள்ள சுபவேளையில் நடைபெறும். (க)

* * *

தென்மராட்சி, ஜூன் 29
சாவகச்சேரி கச்சாய் விசிஞான வீரபத்திரர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வியாழன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். (ஓ-117)

* * *

பனை வேம்போடு கேணி ஞான வீரபத்திரர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று புதன் காலை முதல் நடைபெறும். (ஓ-117)

* * *

[illegible] கந்தசுவாமி கோயில் [illegible] வியாழன் காலை 10 மணிக்கு நடைபெறும்; (ஓ-31)

கரும்புலிகள் நினைவு நாள்: அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
கரும்புலிகள் நினைவு நாளையொட்டி, உடுவில் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்;

திரு. அரசண்ணா கருத்துரை நிகழ்த்துவார்.

* * *

கரும்புலிகள் நினைவு நாளையொட்டி, தெல்லிப்பழை கோட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மகாஜனக் கல்லூரியில் நடைபெறும்.

திரு. கரிகாலன் கருத்துரை வழங்குவர். (ஓ)

பாடசாலைகளில்

யாழ். சாந்தை சிற்றம்பல வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு சி. குணரத்தினம் தலைமையில் மானிப்பாய் சோதிவேம்படி ஒழுங்கைக்கு அருகேயுள்ள மைதானத்தில் நடைபெறும். (க-90)

* * *

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரித் தமிழ்மன்றம் நடத்தும் தமிழ்விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார் (அ)

பாலர் பாடசாலை திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 29
விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் சமூக மேம்பாட்டுப் பிரிவினால் நடத்தப்பட்டு வரும் வின்சன் — ஆஷா பாலர் பாடசாலையின் திறப்பு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சரசாலை வடக்கில் நடைபெறும். (க)

மாகாணசபை முறையை சு.க உடன் ஒழித்துவிடாது

பேட்டியில் சந்திரிகா தகவல்

அதிகாரப்பரவலாக்கல் முறை ஒன்று புதிதாக தயாரிக்கப்படும்வரை, மாகாண சபை முறையை, பதவிக்கு வரும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தொடர்ந்து அமுல் நடத்தும்.

சுதந்திரக்கட்சிப் பிரதித் தலைவர் சந்திரிகா குமாரணதுங்கா பத்திரிகைப் பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

உகந்ததான அதிகாரப் பகிர்வு முறை ஒன்று அமுல் நடத்தப்படும் போதே மாகாணசபை முறை ரத்துச் செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

நிர்வாக முறையைப் புதிய அரசு மாற்றி அமைக்கும். 70 சத வீதமான இளைஞர் சமுதாயத்தை 30 சத வீதமான முதியோர்கள் ஆளுகின்றனர்.

நிர்வாக அதிகாரங்கள் பிரிக்கப்பட்டு இளைஞர் சமுதாயத்துக்கு தலைமைத்துவத்தை வழங்குவதான திட்டம் ஒன்று அமுல் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார். [இ-எ]

ஆராய்ச்சிக்காக

ஆபாச சஞ்சிகை வைத்திருந்த எழுத்தாளருக்கு தண்டம்!

கொழும்பு, ஜூன் 29
தமிழில் அச்சிடப்பட்ட 420 ஆபாச சஞ்சிகைகளை வைத்திருந்த குற்றத்தை ஒப்புக் கொண்ட பிரபல எழுத்தாளர் தோமஸ் ஈப்பன் என்பவருக்கு கொழும்பு மேலதிக நீதிவான் [illegible] 4 ஆயிரம் ரூபாவை அரச செலவாகச் செலுத்தும்படி உத்தரவு இட்டார்.

இப்புத்தகங்களை ஆராய்ச்சிக்காக திரு ஈப்பன் இந்தியாவில் இருந்து கொண்டு வந்தார் என்று எதிர் தரப்பு சட்டத்தரணி முன்வைத்த வாதத்தை நீதிவான் ஏற்க மறுத்துவிட்டார்.

68 வயதான ஈப்பனின் வயது மற்றும் அவரின் இலக்கிய பங்களிப்பு ஆகியவற்றைக் கவனத்துக்கு தாம் எடுத்து இந்தத் தண்டனையை விதிப்பதாக நீதிவான் தெரிவித்தார்.

திரு. ஈப்பன் யாழ். மாவட்டத்தில் உள்ள கல்லூரி ஒன்றில் அதிபராகப் பணியாற்றியிருந்தார். (உ-எ)

ஐ. தே. க தேர்தல் விஞ்ஞாபனம் ஜூலை 20 இல்

கொழும்பு, ஜூன் 29
ஐக்கிய தேசியக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை அடுத்த மாதம் 20 ஆம் திகதி வெளியிடவிருக்கிறது.

தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிப்பதற்கு உரிய ஆலோசனைகளைத் தந்துதவுமாறு ஐக்கிய தேசியக்கட்சி பொது மக்களைக் கோரியுள்ளமை தெரிந்ததே. (இ—எ)

காணவில்லை

எங்கள் வீட்டில் மிகவும் பிரியமாக வளர்க்கப்பட்ட பொமனேரியன் நாய்க்குட்டி நிறம் கறுப்பு நேற்றிரவு தொடக்கம் காணவில்லை. தயவு செய்து அதனை கொண்டுவந்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு:- A. பாலசிங்கம் 81/2, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(31673)

புலோலி பசுபதீஸ்வர தேவஸ்தானம்
பருத்தித்துறை

29 - 6 - 94 புதன் பகல் 11.00 கொடியேற்றம்
5 - 7 - 94 செவ்வாய் காலை 8.00
- 10008 சங்காபிஷேகம் மாலை 6.00
சந்திரசேகரப் பட்ட விழா
10 - 7 - 94 ஞாயிறு இரவு 8.00
பூந்தண்டிகை உற்சவம்
11 - 7 - 94 திங்கள் இரவு 8.00 சப்பற உற்சவம்
13 - 7 - 94 புதன் காலை 8.00 தேர் உற்சவம்
14 - 7 - 94 வியாழன் பகல் 11.00
தீர்த்த உற்சவம்

உற்சவ காலங்களில் தினமும் மாலை
6.15 — 7.15 வரையில்
சுந்தர் மடம் சிவ. வை. நித்தியானந்த சர்மா
அவர்களின் இசைச் சொற்பொழிவு நடைபெறும்

விளம்பர அன்பளிப்பு:-
கனன் போட்டோ கொப்பியிங் சேவிஸ்
இலங்கை வங்கி அருகில், பருத்தித்துறை. (31672)

✻ முதலாவது பிறந்ததின வாழ்த்து ✻

29 - 06 - 1994
கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம் (வேலணை மேற்கு)
தியாகராசா — சுயரசி தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

செல்வன் தி. திவ்யன்

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தனது இல்லத்தில் அமைதியாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, பிரான்ஸிலுள்ள மாமாமார், அன்ரிமார், யாழ் றஞ்சினி அன்ரா, குட்டி அன்ரா (சாந்தி), அத்தை, மாமா, சித்தப்பா, மச்சான்மார், மச்சாள்மார், அண்ணா பர்மிலன், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் முடிப்பிள்ளையார் அருள்பெற்று வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.
(31671)

'கணித கோட்பாடுகளும்நமது வாழ்வில் அதன் பயன்பாடுகளும்'

விரிவுரை நிகழ்த்துபவர்:
டாக்டர் சி. சிறிசற்குணராஜா அவர்கள்
[சிரேஷ்ட விரிவுரையாளர், கணிதத்துறை, யாழ். பல்கலைக்கழகம்]
காலம்: 29 - 06 - 94 புதன் இன்று பி.ப. 4 மணி
இடம்: அறிவியல் கழக மண்டபம் (இணுவில்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
விடுதலைப் புலிகள்
மாணவர் அமைப்பு
[வி-8562]

பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை அதிபர்

ஆர். எஸ். நடராசா சேவை நலன் பாராட்டு மலர்

29 - 06 - 1994

நற்குணம் நிறைந்தவர்

பேராசான் அதிபர் திரு. நடராசா அவர்கள் இன்று ஓய்வு பெறுகிறார்;

இருபத்தொரு வருடங்கள் திறம்படக் கல்விச்சேவை புரிந்து வருவது ஒரு சாதனை.

ஞானங்களில் சிறந்தது கல்வித் தானம்; எழுத்தறிவித்தவர் இறைவனுக்கு நிகராவார் இவரிடம் கல்வி கற்றுப் பெரும் உத்தியோகம் வகித்து முன்னணியில் திகழும் மாணவர் பலர். நிறைவான இறைபக்தியும் எல்லோரையும் இன்முகத்தோடு உபசரிக்கும் பெருங் குணமும், பரோபகார சிந்தனையும், ஆடம்பரமில்லா வாழ்க்கையையும் கடைப்பிடித்தொழுகும் பெருந்தகை அவர். எல்லோர் உள்ளங்களையும் கவர்ந்து மன நிறைவு எய்தியவர்.

தகுதியுடையோரை அவரின் வாழ்நாளிலேயே பாராட்டி மகிழச் செய்து நாமும் இதனை நேரில் கண்டு இன்புறுவது யுக்திபூர்வமானதும் அவர்க்காற்றும் நன்றிக்கடனுமாகும். அவர்கள் நலமே நீடு வாழ வேண்டுமென இறைவன் திருவருளை உளமார வேண்டி அவரை மனமார ஆசீர்வதிக்கின்றோம்.

— ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்,
(நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

வாழ்வில் எளியவர்

"அறிவுடையார் எல்லாம் உடையார்" என்றார் வள்ளுவப் பெருந்தகை. இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் திரு. ஆர். எஸ். நடராசா. குழந்தை உள்ளம் படைத்த இப் பெரியார் தம் வாழ்வில் எளிமையையும் சிக்கனத்தையும் கடைப்பிடித்து ஒழுகுபவர்; இதனால் மனநிறைவோடு வாழ்கிறார்.

தம்மிடம் வந்து சேர்ந்த மாணவர்களை உடல், உளரீதியில் வளர்ச்சி பெற வழி காட்டியதோடு சிறிய வாழ்வுக்கும் நெறிப்படுத்திய பெருந்தகை இவர். அவரிடம் கல்வி பயின்ற மாணவர்களது உள்ளத்தில் அவர் மனிதவடிவெடுத்த ஒரு தெய்வமாகவே காட்சி கொடுக்கின்றார் என்று இப் பெரியாரைப் பாராட்டுவர். எமது நாட்டின் கல்விப் பாரம்பரியத்தையும் நிறுவியோர் நினைவுகளையும் உண்மை வரலாற்றுக் குறிப்புகளோடு எடுத்துக் கூற வல்லவர் இவர் ஒருவரே என்றால் அது மிகையானது.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" என்ற குறட்பாவுக்கேற்ப இப் பெரியார் தமது கடமை உணர்வினாலும் நல்லவற்றை நடைமுறைப் படுத்திய பண்பினாலும் ஆயிரம் ஆயிரம் ஆசிரிய உள்ளங்களில் நிலையான இடத்தைப் பிடித்திருக்கிறார்.

"நீ எதனை மற்றவர்களுக்கு வழங்குகிறாயோ அதுவே உனக்குச் சொந்தமானது" என்பது சுவாமி சிவானந்தரின் வாக்கு. எனவே கல்வியுலகை இன்று தனக்கு முழுமையான சொந்தமாக்கிக் கொண்டு சிரித்த முகத்துடனும் திருப்தியான மனத்துடனும் பணிபுரிந்து ஓய்வு பெறும் இப் பெருந்தகையை வாழ்த்துவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம்)

புகழ் பூத்த கல்வியாளர்

பலாலி ஆசிரியர் கலாசாலை பல இடர்களை நோக்கிய காலத்தில் அதிபர் பதவியை பொறுப்பேற்றவர் திரு. ஆர். எஸ். நடராசா அவர்கள். அவர் தனது ஆற்றலினாலும், ஆளுமையினாலும் கலாசாலையை திறம்பட நடத்தி தமிழ் மக்கள் மத்தியில் இன்று ஒரு புகழ் பூத்த கல்வியாளராக திகழ்கின்றார். எந்த ஒரு விடயத்தையும் தனக்கேயுரிய பாணியில் கையாண்டு சிக்கலான பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டவர்.

பலாலி ஆசிரியர் கலாசாலை இன்று இடம்பெயர்ந்த நிலையிலும் திறம்பட இயங்கி, ஆசிரிய மாணவர்கள் சம்பிரதாய கற்கைநெறிக்கு அப்பால் வாண்மை விருத்தி, தற்துணிவு, தான்தொடக்காற்றல் என்பவற்றில் மேன்மையடைய அக்கறைகொண்டு செயற்படுபவர்.

இவர் தனது கல்விப்பணியை ஆசிரியர் கலாசாலைக்கு மட்டுமின்றி தமிழீழ மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும் நேரடியாக உற்சாகத்துடன் வழங்கி வருபவர். அதிபர் பதவியிலிருந்து அவர் ஓய்வுபெற்றாலும் தமிழீழ மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், ஆசிரியர்களின் வாண்மைவிருத்திக்குமான செழிப்பான தனது பணியை தொடர்ந்து வழங்கி வருவார் என்பதில் ஐயமில்லை. நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

— கலாநிதி சி. சிறிசற்குணராசா,
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
கணித / புள்ளிவிபரவியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்).

அன்பின் சிகரம்

ஆசிரிய கலாசாலைப் பணியில் 25 வருடங்கள் மேவி, வாழ்ந்த பெருமகனே! எளிமையின் திருவுருவாய் எல்லோர்க்கும் வழிகாட்டியாய் ஆசிரிய வாண்மைக்கு எடுத்துக்காட்டாய் மிளிரும், அன்பின் சிகரமே! அறிவின் உறைவிடமே! ஆற்றலின் திருவுருவே! எம் இனிய அதிபரே! ஆசிரிய குழாத்தின் பிதாமகனே! மேருவாய் மகிழ் பவளமுத்தாய் திகழ்ந்த திருமிகு. ஆர். எஸ். நடாவே! முழு நேரத்தையும் கலாசாலைப் பணியாகக் கொண்டு, 24மணியையும் ஆசிரியப் பணிக்கே அர்ப்பணித்து எடுத்துக் காட்டாக வாழ்ந்தவரே! என்றும் நின்சேவை நம் நாட்டிற்கு தேவை. நீவிர் நீடு வாழ வாழ்த்துகின்றோம்.

—சி. எஸ். அருள்பிரகாசம்,—
(தலைவர். விரிவுரையாளர் குழுமம்
பலாலி ஆசிரிய கலாசாலை)

சிறந்த வழிகாட்டி

தமிழ் மாணவ உலகம் தலைசிறந்த ஒரு வழிகாட்டியின் நெறிப்படுத்தலை இழக்கப்போகின்றது என்ற எண்ணம் வேதனையைக் கொடுக்கின்றது.

பல்கலைக்கழக மட்டத்தில் தனது பட்டப்பின் கல்வித் தகைமை நெறியையும், கல்வியியல் முதுகலைமாணிக் கல்வியையும் திரு. நடராசா தொடர்ந்த காலங்களிலிருந்து, அவருடைய ஆசிரியர்களில் ஒருவராக, அவரது செயற்பாடுகளை அவதானிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கல்வியில் புலமையும், ஆய்வுத் திறனும் மனப்பாங்கும் கொண்டவராக அவர் திகழ்ந்தார்.

அவருடைய ஓய்வு எமக்கிருக்கும் வசதிகளை மேலும் நலிவடையச் செய்வதாகும். இருப்பினும், அவருடைய சேவை எமது கல்வி உலகுக்குத் தொடர்ந்தும் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அவர் நிறைந்த பேரோடும் புகழோடும் நீடுவாழ வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் வ. ஆறுமுகம்
(தலைவர், கல்வியியற்துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

ஆசிரிய மாணவர் உயர்வு பெற

அறிவூட்டிய ஆர். எஸ். என்.

அதிபர் ஆர். எஸ். நடராசா

சுந்தரம் பொதிந்த நற்றமிழ் நாயகன் நடராசா நெடுந்தீவு தந்த அடலேறு எனலாம். ஆற்றலின் தோற்றம்; அடக்கத்தின் பிரதிவிம்பம்; ஏற்றமுறும் எம் தமிழின் இலங்கு ஞாயிறு; கூற்றிலே குளிர்மை; குறியிலே தெளிவு; நிலை தடுமாறா நீர்மை — இத்தனையும் இணைந்த நடராசன் அவர்கள் சமூகச் சிற்பி யெனும் ஆசிரியப் பணியை மூன்று தசாப்தத்திற்கு மேலாக முட்டற வினை செய்திரனானான். இரு தசாப்தங்களில் ஆசிரிய கலாசாலைப் பணியில் இணைந்துகொண்டு விரிவுரையாளனாகி உப அதிபராய் உயர்ந்து நிறைவாக அதிபரானார்.

ஞானமும், கல்வியும் நயந்த நடராசா எங்கள் தமிழ்மணியின் தவப்புதல்வனெனலாம். வையகம் பயனுற வாழ வேண்டுமென்ற வேணவாக் கொண்ட விறலோன், நல்லதோர் வீணையாக வீணாகானபுரத்தில் இசை மிழற்றிய இனிய மனிதன் கல்விப் புலத்தில் டிப்ளோமாப் பட்டமும் முதுகலைமாணிப் பட்டமும் பெற்றுத் தன் வாண்மையை விருத்தி செய்த பேராசான்.

காலத்தின் கொடுமை கண்டு கலங்காத உள்ளத்தினன்; துலங்கும் அறிவால் தூயன சிந்தித்துச் திண்ணமுறச் செயல் அனைத்தும் செய்யும் திறன்; கலாசாலையிலிருந்து இராணுவ முற்றுகையால் நிலைகுலைந்த பலாலி ஆசிரிய கலாசாலையை கோப்பாய் ஆசிரிய முத்துத்தம்பி வளாகத்திற்குக் கொணர்ந்து முத்தென விளங்கும் மாணவர்க்குச் சித்தம் தழைக்க அறிவமுதம் படைத்த அறிஞன்; கலாசாலை சகல துறைகளிலும் பூரணத்துவமடைய வேண்டுமென்ற வேணவாவுடன் வினைபல புரிந்தவர். அதன் பயனாய் வணிகம், ஆங்கிலம், உடற்கல்வி போன்ற கற்கைப் புலங்களை மீண்டும் விரிவுபடுத்திய பெருமைக்குரியவர்.

மண்ணின் வீரர்களின் உழுவலன்பொடு பரம திருப்தியான புதிய வளாகத்தை விரிவாக்கினார். செயல்திறன் சிந்தனை ஊற்றிலே தங்கியுள்ளதென்பதை யதார்த்தமாகக் காட்டும் வகையில் இராசரத்தின மண்டபத்துக்கு புதிய மேடை ஒன்றை ஆசிரியர் நிர்மாணித்த பெருந்தகை.

மாணவர்களைக் கொண்டே முத்தன்ன முத்தமிழ் விழாக்கள், நெஞ்சையள்ளும் சிலம்பு தந்த இந்திர விழா போன்றவற்றை எடுத்துக்காட்டி எழில் குலுங்க வைத்த ஏராளன். நாடகப் பட்டறைகள், உடுத்தொகுதிகளை நீலவானில் கண்டு ஆசிரிய மாணவர் வானியல் அறிவை விரிவுபடுத்த இரவுப் பாசறைகள் போன்றவை நடத்திய சிந்தனைச் சிற்பி.

உள்ளத்தால் உயர்ந்த நடராசா திருநெல்வேலி முத்துத்தம்பி இந்துவிடுதி மாணவர் மேம்பாட்டிற்கு கொடிதினம் நடத்தி நிதி சேகரித்து வழங்கிய பெருமைக்குரியவர். "அன்னசாலையினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்ற எண்ணக்கருவில் இதயம் தளம்பாத கர்ம வீரன்.

எழுதுகோல் வாளிலும் வலிது என்பர். அவ்வண்ணம் இவரது உள்ளம் பேசியது! பேசியவற்றைக் கையிலுள்ள எழுதுகோல் கருத்துச் சித்திரங்களால் படைத்தது. ஆராய்ச்சிக் கட்டுரைகள் மின்னொளிபோல் எத்தனை கண்களைத் திறந்தன? எத்தனையோ எழுத்தோவியங்கள் இலக்கியப் பணியில் மூழ்கித் திளைத்தன. இந்த மண்ணின் தமிழ்த்தலைமகன் என விளங்கிய இலக்கிய கலாநிதி பண்டிதமணி ஐயாவின் நூல் வெளியீடு வரை இவரது சிந்தனையும் எழுதுகோலும் ஒருமுகப்பட்டு உழைத்தன.

இத்தகைய ஆற்றல் மிகு அதிபர் பல்லாண்டு வாழ்ந்து பைந்தமிழ் பணியாற்ற என் சிந்தையார்ந்த வாழ்த்துக்கள்!

இரா. சுந்தரலிங்கம்
(முன்னாள் பிரதேசக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்

கடந்து வந்த பாதை

- ★ பெயர்:- இராமநாதர் சுந்தரம்பிள்ளை நடராசா
- ★ பிறந்த திகதி:- 30 - 06 - 1933
- ★ ஆரம்பக்கல்வி:- நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை
- ★ க.பொ. த. (சாதாரணம்தரம்) — நெடுந்தீவு மகாவித்தியாலயம்
- ★ பட்டப்படிப்பு:- சென்னைப் பல்கலைக்கழகம் (1954—1958)
- ★ ஆசிரியப் பணி:-
  - 1958 - 1963:- கல்முனை பாத்திமா கல்லூரி
  - 1963 - 1966:- தம்பிலுவில் மகா வித்தியாலயம்
  - 1966 - 1969:- ஏழாலை மகா வித்தியாலயம்
  - 1969 - 1970:- பேராதனைப் பல்கலைக்கழகம்
  - 1970 - 1971:- விக்ரோறியாக் கல்லூரி
  - 15-02-1971:- கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை
  - 01-09-1975:- பலாலி ஆசிரிய கலாசாலை
  - 06-05-1987:- உபஅதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை
  - 18-12-1989:- அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை
  - 30-06-1994:- சேவையிலிருந்து ஓய்வு

★

அதிபர் ஆர். எஸ். மாணவரின்

மாதா, பிதா, குரு, தெய்வம்

அன்பும் ஆற்றலும் ஆளுமையும் நிறைந்த தலைவராக பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபாசனத்தில் அமர்ந்து ஆயிரக்கணக்கான நல்லாசிரியர்களை உருவாக்கியவர் ஆர். எஸ். நடராசா அவர்கள்.

கல்வியிற் பெரியோன்; தமிழ், ஆங்கிலம் கல்வித்தத்துவம் உளவியல் என்பனவற்றை ஆழமாக ஆராய்ந்து விரிவுரையாற்றுகின்ற வல்லமையாளன் இலங்கைக் கல்வி வரலாற்றை நுண்ணாய்வு செய்து கட்டுரைகள் வரைந்தவர்.

கருணை, கடமை, கட்டுப்பாடு உணர்வுமிக்க அதிபர் அவர்களது நல் முயற்சியால் பலாலி ஆசிரிய கலாசாலை பல துறைகளிலும் அகன்று சிறப்புற்றது.

சிம்மக்குரலில் அவர் உதிர்க்கும் சிந்தனைகளை ஆசிரிய மாணவர்கள் அனுபவித்து மகிழ்வார்கள். [illegible] களை வாசித்த [illegible] போன்றது அதிப [illegible] யாடுகின்ற சில நிமிட நேரம் அத்தனைய அறிவியல் மேதை, நல்லாசான் நடராசனின் சேவைக்காலம் ஆசிரிய உலகால் என்றும் மறக்க முடியாதது.

பலாலியிலிருந்து கலாசாலை நிலை நிற அலைந்த போது அதைத்தகுந்த இடத்தில் ஆரம்பித்து இன்றுவரை காப்பாற்றிய பெருமை அவரைச் சார்ந்ததாகும்.

அதிபர் அவர்களிடம் காணப்படும் பல இயல்பான சிறப்பு அம்சங்களில் முக்கியமானது அதிதீவிரமான ஞாபக சக்தி, அதனைக் கண்டு பலரும் வியப்பர். பெற்ற பிள்ளைகளுக்கு மேலாக ஆசிரிய மாணவர்களை நல்வழிப்படுத்தி; நல்லவர்களாக, வல்லவர்களாக வாழ வைத்தால் அதிபர் அவர்களை மாணவர்கள் தாயாக, தந்தையாக, குருவாக, தெய்வமாகப் போற்றி வாழ்கின்றார்கள். அவரது பிறப்பு அத்தாட்சி கலாசாலையிருந்து அவருக்கு பிரியாவிடை கொடுத்தாலும் அவரிடமுள்ள பல சிறப்பு அத்தாட்சிகள் கல்வி உலகிற்கு என்றும் அவசியமானவை. நம் நாட்டுக்குக் கிடைத்த நல்ல சொத்தான தலைவர் ஆர். எஸ். என் நன்றே வாழ இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

மாணவி ஸ்ரீ. ஞானா

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா இன்று ஓய்வுபெற்றுச் செல்வதை ஒட்டி பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை குடும்பத்தினர் இந்த சேவை நலன் பாராட்டு மலரை வெளியிடுகின்றனர்.

நிறைவளமுடைய அதிபர்

பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை அதிபர் உயர்திரு. ஆர். எஸ். நடராசா அவர்களின் கல்விச் சேவையை இக்கலாசாலை ஆசிரிய, மாணவர்கள் பெற்ற பெரும் பாக்கியம் என்றே கருதுகின்றேன்.

அமைதியான போக்கு, ஆழமான அறிவு, நேரிய செயற்றிறன் ஆகிய கொடைகளைக்கொண்டு ஆசிரிய மாணவர்களை உருவாக்குவதில் பெரும் பங்கு கொண்டவர். கத்தோலிக்க சிறப்புப் பயிற்சிபெறும் மாணவர்களை ஊக்குவித்தும், இவர்களுக்கு கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை வரவேற்றும் வழிநடத்தியவர்.

தமது ஆசிரியப் பணியில் நிறைவளத்தோடு பணியாற்றி இளைப்பாறும் அதிபர் அவர்களை வாழ்த்தி, இன்னும் பல்லாண்டு உடல், உள நற்சுகத்துடன் வாழ இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

வண. தோமஸ் சவுந்தரநாயகம்
ஆண்டகை அவர்கள்
யாழ். ஆயர்

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

சிறியன சிந்தியாத செம்மல்

சமூகத்தை நன்னெறிப்படுத்தும் ஞான விளக்குகளான ஆசிரியர்களை உருவாக்கும் ஆசிரிய கலாசாலைகளில் பலாலி ஆசிரிய கலாசாலை தனியிடம் பெற்று விளங்கி வருவது நாமெல்லாம் அறிவதே. புகழ்பூத்த இக்கலாசாலை இடம்பெயர்ந்து நலிவுற்று இருந்தபோது அதற்குப் புத்துயிர் ஊட்டிச் சமூகப்பயன்பாடு உடையதாக ஆக்குவதில் முன்னின்று உழைத்தவர் ஓய்வுபெறவுள்ள கலாசாலை அதிபர் உயர்திரு. ஆர். எஸ். நடராசா ஆவார். தனது அறிவின் ஆற்றலாலும், ஆளுமைப் பண்பினாலும் இப்பணியை அவர் செவ்வனே ஆற்றமுடிந்தது. "நாம் வந்தபோது இருந்ததைவிட இருந்த இடத்தை சிறப்பானதாக விட்டுச் செல்லவேண்டும்" என்ற கொள்கையை சென்ற இடமெல்லாம் செயற்படுத்தியவர். வாக்குக்கும், வாழ்வுக்கும் இடையே வேறுபாடற்ற இவரது வாழ்வுதான் இவரது மாணவர்களை மட்டுமல்ல பிறரையும் இவர்பால் ஈர்க்கும் மகத்தான சக்தியாக அமைந்துள்ளது. சிறந்த மனிதநேயமிக்க இப்பண்பாளர் இக்கலாசாலையின் விரிவுரையாளராக, உபஅதிபராக, அதிபராக பலபடிநிலைகளில் பயன்பட பணியாற்றியுள்ளார். இவர் ஓய்வுபெற்ற பின்னரும் சமூகத்தின் கல்வி மேம்பாட்டிற்கு தொடர்ந்தும் உதவ ஏற்ற உடல், உள நலனை வழங்க எல்லாம்வல்ல இறைவனை வாழ்த்தி அமைகிறேன்.

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபர் / மாவட்ட ஆணையாளர்
யாழ்ப்பாணம் மாவட்டம்

அன்பும் பண்பும் மிக்கவர்

ஆர். எஸ். நடராசா ஆழ்ந்தஅறிவுடைய அறிவொளி; எதிலும் சிறந்த மனமும் பரந்த நோக்கும் உடையவர்; சிந்தையில் ஈழம்; சிரிப்பில் அன்பும் பண்பும் கொண்டவர்.

நம் நாட்டில் ஆசிரியர் வாண்மையை வளர்த்த பேராசான். ஆர். எஸ். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவர் மனதில் நீங்காத விளக்கு.

மனித நேயம் கொண்டு மாணவரையும் நண்பர்களையும் நேசிப்பவர்; பகிடியும் பம்பலும் நிறைய அவரிடம் உண்டு! ஆண்டாண்டு வயது கூடினாலும் உள்ளத்திலும் உடலிலும் இளமை கொண்டவர்;

நான் விரும்பும் கல்வியாளரில் ஒருவர் ஆர். எஸ். அவர் சேவையைப் போற்றிப் பாராட்டுகிறேன். மேலும் அவர் நிறைந்த பொலிவு பெற்று வாழ வாழ்த்துகிறேன்.

= க. கந்தசாமி =
(கல்விப்பணிப்பாளர் யாழ், வடக்கு வலயம்)

மனித நேயம் நிறைந்தவர்

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்ந்து. தாம் வாழ்வதோடு தமது சமூகமும் தக்கதாக வாழ வழிகாட்டுபவர்கள் ஏற்றிப் போற்றப்பட வேண்டியவர்கள்; அவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் திரு. ஆர். எஸ். நடராசா அவர்கள்.

பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை "இடம்பெயர்வு" டன் தொடர்புபட்ட பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கிய போதிலும் அதனைத் திறம்பட நடத்தியமை அவரது பெருமைக்குச் சான்று. அவர் ஒரு சிறந்த நிர்வாகியாக மட்டுமன்றி மனித நேயம் மிக்கவராகவும் விளங்கினார். அவரோடு சக விரிவுரையாளராகக் கடமையாற்றிய காலத்தில் அவரது சிறப்புக்களைக் காணமுடிந்தது.

"பணியுமாம் என்றும் பெருமை" என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்து பலரது உள்ளங்களிலும் நீங்கா இடம் பிடித்துக் கொண்ட அவர் எதிர்காலத்திலும் சிறப்போடு வாழ்ந்து, பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையின் சேவையிலிருந்து தனது பங்களிப்புக்களை வழங்க வேண்டும். அதற்கு வேண்டிய நீடித்த ஆயுளையும், தேக ஆரோக்கியத்தையும், மன வலிமையையும் எல்லாம் வல்ல இறைவன் அருள்வாராக.

சி. இராமநாதன்
(அதிபர், கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை)

சிந்தித்து செயற்பட்டவர்

ஓய்வுபெறும் கலாசாலை அதிபர் திரு: ஆர். எஸ். நடராசா பாடசாலை மாணவருக்கு ஆசிரியராய், கொழும்புத்துறை ஆசிரியகலாசாலை ஆசிரிய மாணவருக்கு ஆசிரியராய் சேவைசெய்து விசேடபயிற்சி ஆசிரிய கலாசாலைபலாலிக்கு விரிவுரையாளராக மாற்றம் பெற்று தமது சேவைத் திறமையினாலேயே அங்குள்ள ஏனைய விரிவுரையாளரை வழிப்படுத்தும் அதிபராகினார் என்பது சொல்லாமலே விளங்கும்.

கோப்பாயிலே இடம்பெயர்ந்து நிலையற்ற பலாலி ஆசிரிய கலாசாலையை திருநெல்வேலியில் சீர் சிறப்புடன் இன்று இயங்கச் செய்த பெருமை இவரையே சாரும். போரின் அவலங்களை கலாசாலை சுமந்து நின்ற வேளை தனது பணியை திறம்பட நிறைவேற்றி கலாசாலையை மிளிரச் செய்தார் அவர்.

"எண்ணித் துணிக கருமம்" என்ற பொய்யாமொழிப் புலவன் வாக்குக்கு ஏற்ப தான் செய்யும் ஒவ்வொரு கருமத்தையும் முன் கூட்டியே தீர்க்கமாகச் சிந்தித்து செயலாற்றி வெற்றி கண்டமை அவரது அறுபதோராவது வயதிலும் சேவை செய்ய வழிவகுத்துள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

வளம்பட வாழ்க்கையை நடத்தி திறம்பட முடிவுகளை எய்திய திரு. ஆர். எஸ். நடராசா அவர்கள் வரப்போகும் ஆண்டுகளிலும் சூழலுக்கேற்ற சேவைசெய்து, தமிழ் ஈழச் சமுதாயத்திற்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்து மனைவி மக்களுடன் நலம் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.

திருமதி த. அரிராஜசிங்கம்,

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தேவையானோர் பின்வரும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். ஐ. பேரானந்தம், இல. 7, 4ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை. (சி-8554)

Purebred Pobermann Pincher X Rhodesian Ridgeback நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31646)

கோழிக்குஞ்சு விற்பனை

Christombu Broiler குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் பதிவு செய்து 30-6-94 வியாழக்கிழமை பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31643)

தேவை

மேலைத்தேச, கீழைத்தேச உணவு வகைகள் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். நேரில் தொடர்புகொள்ளவும்; ஹொட்டல் றொஜெக்ஸ், இல. 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (31640)

Prima கோழித்தீன் மொத்தமாகத் தேவை. தொடர்பு கொள்க. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31644)

பாதுகாப்புத் துறையில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். நஷனல் பாதுகாப்புத் திட்டம், இல. 181/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (31662)

கட்டுரை மலர்

காலத்துக்கு ஏற்ற வெளியீடு. சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது. சக்தி மாஸ்ரரின் மாணவர் கட்டுரை மலர் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கும் 6ஆம், 7ஆம், 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் உகந்தது. (31545)

கணக்கியல் A/L

"கணக்கியல் கோட்பாடு A/L" விற்பனைக்குண்டு. ஆக்கம்: S. K. பிரபாகரன், வித்தியா கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம்; ஆனந்தராஸ் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-8605)

இசை வகுப்புகள்

கிற்றார், (Guitar) டிறம்ஸ் (Drums) புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: யாழோசை, ஆனைப்பந்தி. (31509)

மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள டில்கா வார்ச் அன்ட் றேடியோ வேர்க்ஸ், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி, தலைமையகம் 284, வானவில் அருகில் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (இ-8299)

O/L கணிதம்

Distinction பெறுபேறடைவதற்கு ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் சகல Sectionகளும் Portionகளும் நிறைவேற்றப்பட்டு Section and Portion Revision உடன் Past Papers Practiceஉம் அளிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டிக்குளி. (7483)

வெளிவந்துவிட்டது

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை நூல்கள் இவ்வருடம் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக நயினை எஸ். சேரமேன் வரபிள்ளை, ஐ. திருவாசகநாதர் ஆகியவர்களினால் ஆக்கப்பட்ட கணிதம், தமிழ் நூல்கள் கீன் கல்வி நிலையத்தினால் வெளியிடப்பட்டு, விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. எல்லாப் புத்தகக் கடைகளிலும், கீன் கல்வி நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ளலாம். விலை 75/-. (சி-8608)

யாழ். நகரில் பதனிட்ட பால் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

வன்னி மாவட்ட தமிழ்ப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழிற் பிரிவினர் பாலை பதனிட்டு யாழ். நகரில் விநியோகம் செய்து வருகின்றனர்.

கூடிய பால் உற்பத்தி செய்யப்படும் வன்னியிலிருந்து பால் பதனிடப்பட்டு, தொற்றுநீக்கப்பட்டு, போத்தலில் அடைத்து இங்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பால் பதனிட்டு முயற்சி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையின் முதற்கட்டமாக யாழ் நகரில் வானவில் குளிர்பான நிலையத்திலேயே இதன் விற்பனை தற்போது இடம்பெற்று வருகின்றது. (ஓ)

சிரமதானம்

வட்டுக்கோட்டை, ஜூன் 29

அராலி மேற்கு ராஜன் கதிர்காமர் பொதுப்பணி விளையாட்டுக் கழகத்தினர் அராலி தெற்கு பிரதான வீதியின் இரு மருங்கிலும் உள்ள பற்றைகளை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். (இ-161)

I. A. B.

DEC. - 1994
FOUND. INTER & FINALS
வகுப்புக்கள் ஆரம்பம்:
06 - 07 - 1994

விவரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. PETER'S LANE, JAFFNA.
[C-8609]

31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
07
—
09
—
1910

மறைவு:
30
—
05
—
1994

திருமதி ஐயம்பிள்ளை இராசம்மா

அன்பு அம்மா!

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும், உங்கள் அன்பு நினைவுகள் எங்களை விட்டுப் பிரியா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

ஐ. பாலசிங்கம் (மகன்)
"P. M. சங்கரப்பிள்ளை வாசா",
சங்கரத்தை வீதி,
வட்டுக்கோட்டை.
(31650)

தவிடு விலை குறைப்பு

சோழன் நெல் அரிசி வாணிப நிலையத்தில்

கிலோ பதினாறு ரூபாவாக இருந்த நம்பர் I
தவிடு பதின்மூன்று ரூபாவுக்கும்

கிலோ பதின்நான்கு ரூபாவாக இருந்த நம்பர் II
தவிடு பதினொரு ரூபாவுக்கும்

பெற்றுக் கொள்ளலாம் என்பதை பாவனையாளர்களுக்கும் வியாபாரிகளுக்கும் அறியத்தருகிறோம்:

சோழன் நெல் அரிசி வாணிபம்

பலாலிச்சாலை, திருநெல்வேலி.

கிளை:
- ❋ பருத்தித்துறைச் சாலை, நெல்லியடி.
- ❋ சோழன் அரிசி ஆலை, மீசாலை.
- ❋ சோழன் நடமாடும் விற்பனை நிலையம்.

[சி-8558]

மொழி பெயர்ப்பாளர் தேவை

இலத்திரனியல் (Electronic) கணனி (Computer) பௌதிகவியல் (Physics) ஆகிய துறைகளில் நன்கு அனுபவமுள்ள ஆங்கிலத்தில் உள்ள புத்தகத்தை தமிழில் மொழி பெயர்ப்புச் செய்வதற்கு மொழி பெயர்ப்பாளர் உடன் தேவை. சம்பளம் மாதம் 4000/-க்கு மேல் வழங்கப்படும். நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ உங்கள் தகைமைகளைக் குறித்து 05-07-1994க்கு முன் விண்ணப்பிக்கவும்.

குறிப்பு:

முழு நேரமாக அல்லது பகுதி நேரமாக வேலை செய்வதற்கு விருப்பமுள்ளவரும் விண்ணப்பிக்கலாம்.

விவரங்களுக்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ரயில்வே கடவைக்கு அருகில்) (31664)

காமாட்சியம்பாள் இந்துபரிபாலன சபை - நீர்வேலி

பதிவு இல: 6/3 J-3/5/49

சமயபாடப் பரீட்சை அக்டோபர் - 1994

யாழ்: மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை கல்வி பயிலும் மாணவரிடையே வருடா வருடம் நடத்தப்பட்டுவரும் மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

விண்ணப்ப முடிவு திகதி: 15 — 07 — 1994

மேலதிக விவரங்களுக்கு பரீட்சை செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

தி. வேல்நம்பி,
பரீட்சைத் தலைவர்.

த. விக்கினேஸ்வரன்,
பரீட்சை செயலாளர்.

(31657)

மாணவர்களே! வாசகர்களே!!

நீங்கள் பாவித்த புத்தகங்கள், கொப்பிகள்,
பத்திரிகைகள், தாள்கள் போன்றவற்றை
நியாயமான விலையில் உங்களிடம்
கொள்வனவு செய்ய
நீங்கள் நாட வேண்டிய இடம்:

யாழ். பழைய புத்தகக் கடை

இவை மட்டுமா!!!
இங்கு...... நாவல்கள், சமயசாஸ்திர நூல்கள் மற்றும்
பாடப் புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள்,
கொப்பிகள் இன்னும் பலவும்
மலிவு விலையில் விற்கப்படும்.
உங்கள் படிப்பைத் தொடர்ந்து செல்ல
உங்களுக்கு கை கொடுத்து உதவும்

யாழ். பழைய புத்தகக் கடை

நீங்கள் வாங்கவும், விற்கவும் நாட வேண்டிய
யாழ். நகரின் தனிப்பெரும் நிறுவனமாகும்!

யாழ். பழைய புத்தகக் கடை

அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.
[31641]

முதலாம் ஆண்டு நினைவு தினம்

செல்வி மேரி ஸ்ரெலா மாட்டின்

உதயம்:
06 — 04 — 1965

உதிர்வு:
29 — 06 — 1993
(இத்தாலி)

"எங்கள் குலவிளக்கே! மேரி ஸ்ரெலாவே! மண்ணுக்குள் மறைந்தது உன் உடல் தானம்மா! மாநிலம் வாழும் வரை எம் மனதுக்குள்ளே வாழ்வாயம்மா"

உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்,
பெற்றோர், சகோதரர்கள்.

15 A, ஈச்சமோட்டை,
[illegible]
யாழ்ப்பாணம்.
(31639)

இலங்கையன் பதிப்பகம்

ஸ்ரீ லங்கா அச்சகம், ஸ்ரீ காந்தா அச்சகம்
ஒன்றிணைந்த சேவையே

இலங்கையன் பதிப்பகம்

உங்கள் தேவைகளுக்கு!
பதிப்பகசாலை -
ராஜா தியேட்டர் அருகாமையில்
தொடர்பு கொள்ளுங்கள்.
[31666]

இடமாற்ற அறிவித்தல்

வடமாகாண

அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்

1-7-1994 முதல் பாண்டியன்தாழ்வு, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதை சகல சங்க அங்கத்தவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடமாகாண
அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்,
பாண்டியன்தாழ்வு,
கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

மு. சி. சண்முகராசா
செயலாளர்.
(சி-8560)

இந்துவின் இதய அஞ்சலி

1996ஆம் ஆண்டு உயர்தர கணிதப் பிரிவு
மாணவன்
செல்வன் கர்ணனின்
தந்தையார்

பொன்னையா தயாநேசன்

அவர்கள் கொழும்பில் காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

96 ஆம் ஆண்டு
கணித உயிரியல் மாணவர்கள்,
யாழ். இந்துக் கல்லூரி.
(31661)

45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்:
27
—
07
—
1945

மறைவு:
16
—
05
—
1994

அமரர் டாக்டர் கணபதி கதிரவேல்

(வசந்தா வைத்தியசாலை, காங்கேசன்துறை)

எங்கு இனிக் காண்போம்
எவர் இனிப் புன்னகைப்பார்
டாக்டராய் அன்பராய்
எனைக் காத்த தெய்வமே!
நோய் என்று வந்தோரை உன் சுகநலம் மதியாது
அவர் சுகத்தைக் கண்டவனோ
உன் உடலின் நோய்தனுக்கு
இங்கு ஏது மருந்து என நினைத்து
தந்தை, தாய் சென்றிடவே
அவர்களிடம் சென்றிடவும் நினைத்தாயோ?
எம்மை எல்லாம் மறந்து விட்டு,
இறைவனடி எய்தி விட்டாய்
ஏங்குதையா எம் மனதும்
ஏது வழி ஓடி வர.

அன்பான தந்தையே!
மனதாலும் எமை நோகாத தெய்வமே!
அப்பா! ஏன் தான் எமை மறந்து
எய்தி விட்டாய் இவ்வுலகை விட்டு
எமக்கு வழி காட்டுதற்கு
எவர் உண்டு வையகத்தில்
திசையறியாப் படகு போல்
தவிக்கின்றோம் இப்புவிதனிலே
இன்றோடு எமைப் பிரிந்து
திங்கள் ஒன்றரை ஆகிடினும்
எம் முன்னே நீர் திரிந்து நடமாடிடும்
தோற்றம் தான் கண் எதிரே
என் செய்வோம்
உங்கள் துணை வருவதற்கு
நாம் வாழும் காலம் வரை
உமது நினைவலைகள்
வளரும் அப்பா!

- மனைவி, பிள்ளைகள்

16-05-1994ஆம் திகதி இறைவனடி சேர்ந்த எமது தெய்வம் டாக்டர் கதிரவேல் அவர்களின் சமக்கிரியைகளில் பங்குபற்றி உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று 29-06-1994 புதன்கிழமை நடைபெற இருக்கும் அந்தியேட்டி நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கண்ணீருடன்,
மனைவி: க. வசந்தகுமாரி,
மக்கள்: க. சிறீதர், க. சிறீசங்கர்,
க. சிறீசர்கா.

தற்போதைய முகவரி:
நீதிமன்ற வீதி,
மன்னார்.
[7848]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தேர்தல் பயங்கரவாதம்!

அரச நெறிகள், மரபுகள் பண்புகளை மீறுவதில், உலகில் சாதனை படைப்பதில் முன்னணி வகிப்பது ஸ்ரீலங்கா! அரசமைப்பை அடிக்கடி மாற்றுவது முதற்கொண்டு, நீதிமன்றம் கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டவர்களை அவர்கள் அதிலிருந்து தப்பும் விதத்தில் ஜனாதிபதியே மன்னிப்பு வழங்குவது வரை ஜனநாயக வரன்முறைகளையும் பாரம்பரியங்களையும் உடைத்தெறிவதில் ஸ்ரீலங்கா ஆட்சியாளர்கள்மகாசூரர்கள்!

அந்த வகையில், வரிசையில், உலகத்தில் எங்கும் இடம் பெறாத "மிகப்பெரிய சாதனை" ஒன்றை விஜேதுங்கா அரசு நிலைநாட்டியிருக்கிறது! நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத்தேர்தல் நடைபெற்று, புதிய அமைச்சரவை அமைக்கப்படும் வரை அரச நிர்வாகத்தைப் பராமரிப்புச் செய்யும் காபந்து அமைச்சரவையில் மொத்தம் எண்பது அமைச்சர்கள் அங்கம் வகிப்பதே அந்தச் சாதனையாகும்!

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 225 ஆகும். அவர்களில் 125 பேர் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்களில் 80 பேர் அமைச்சர்கள்! இவர்களில் முப்பத்திரண்டு பேர் அமைச்சரவை அந்தஸ்துள்ளவர்கள்: ஏனையோர் ராஜாங்க அமைச்சர்களும், கருத்திட்ட (Project) அமைச்சர்களுமாவர் — அரை அமைச்சர்களும், குட்டி அமைச்சர்களுமாவர்!

அரை, குட்டி அமைச்சர்கள் பட்டத்தில், பதவியில், அதிகாரத்தில் மட்டுமே முழு அமைச்சர்களை விடக் குறைந்த தரத்தினராக இருக்கிறார்கள். மக்கள் வரிப் பணத்தில் அவர்கள் பெறும் வருமானமும், அனுபவிக்கும் சலுகைகள் வசதிகளும் முழு அமைச்சர்களை விட எவ்விதத்திலும் குறைந்தவை அல்ல.

சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கே மக்கள் வரிப்பணத்தில் இருந்து மாதாந்தம்- 25,000 ரூபா செலவிடப்படுகிறது. சம்பளம் ஒருபுறமிருக்க வாகனம், எண்ணிலடங்கா அலவன்ஸ்கள் என்று ஏராளம், ஏராளம்!

அவ்வாறாயின் அரை அமைச்சர்களும், குட்டி அமைச்சர்களும் மக்கள் வரிப் பணத்தில் எவ்வளவு பணத்தை "ஏப்பம்" விடுவார்கள் என்பதனைக் கற்பனை செய்தும் பார்க்கலாம். கணக்குப் போட்டும் பார்க்கலாம்!

நாடாளுமன்றம் கலைக்கப்படாமல் இருக்கும்போது இத்தனை அமைச்சர்கள் பதவியில் அமர்ந்து மக்களின் வரிப் பணத்தை விழுங்குவது ஸ்ரீலங்கா போன்ற சின்ன நாட்டுக்கு கட்டுப்படியாகுமா என்பது கேள்விக்குரியது!

காபந்து அமைச்சரவையிலும் இத்தனை பேரும் அங்கம் வகிப்பது என்ன நியாயம்? அதன் நோக்கம் என்ன? பதவியில் இருப்பதால் கிடைக்கும் அதிகாரத்தையும், செல்வாக்கையும், சலுகைகளையும் பயன்படுத்தி தேர்தலில் அரசியல் லாபம் தேடுவது தான்!

இந்தப் பதவிகள் வாக்குத் திரட்டுவதற்குமட்டும் உதவும் என்பதல்ல. தேர்தல் மோசடிகள் செய்வதற்கும் அடாவடித்தனங்கள் புரிவதற்கும் பேருதவியாக இருக்கும்.

அத்தகைய மோசடிகளும், அடாவடித்தனங்களும், "தேர்தல் பயங்கரவாதம்" மூலம் ஆளுங்கட்சியையே பதவிக்குக் கொண்டு வருவதற்கான மிகப்பயங்கரம் நிறைந்த சூழ்ச்சியாகும்.

இதனை உணர்ந்துதான், எதிரணியினர் ராஜாங்க அமைச்சர்களையும், கருத்திட்ட அமைச்சர்களையும், காபந்து அமைச்சரவையில் வைத்திருப்பதற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தி உள்ளார்கள்.

இதுவெறும் போர்க்கொடி உயர்த்துவதோடு நிற்கும் விவகாரம் அல்ல. தேர்தல் முடிவுகளையே மாற்றி அமைக்கக் கூடியது. மிக மிக ஆபத்தானது. மக்கள் தீர்ப்பை மறுவளமாக்க வல்லது. ஜனநாயகத்தின் உயிரையே பறிப்பதாகும்!

தேர்தலுக்கு முன்னர் இதற்கு எதிரான பெரும் போராட்டம் ஒன்று தெற்கில் தேவைப்படுகிறது. அது நீதிமன்றம் ஊடானதாகவும் இருக்கலாம்! மக்கள் சக்தியாகவும் இருக்கலாம்!

நயினை தேர்த் திருவிழா சென்று திரும்பியோர் மீது துப்பாக்கிச் சூடு

ஒருவர் பலி! 8பேர் காயம்!!

நெடுந்தீவு கரையில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 29

சரித்திரப் பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் தேர்த் திருவிழாவுக்குச் சென்றுவிட்டு திரும்பிய பக்தர்கள் பயணம் செய்த வள்ளம் ஒன்றின் மீது நெடுந்தீவு கரையில் வைத்து படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர், இதில் ஒருவர் உயிரிழந்தார். 8 பேர் படுகாயமடைந்தனர்.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

நெடுந்தீவில் இருந்து கடந்த புதன்கிழமைகாலை நயினாதீவுக்குச் சென்ற மக்கள் தேர்த் திருவிழாவை முடித்துக் கொண்டு அன்று மாலை அங்கிருந்து மீண்டும் நெடுந்தீவு திரும்ப ஆயத்தமாகினர்.

அப்போது நயினாதீவுதுறையில் வைத்து இராணுவத்தினர் அவர்களைச் சோதனையிட்டனர்.

சுமார் இரண்டு மணி நேரம் சோதனை செய்த பின் இரவு 7.30 மணியளவிலேயே அவர்களை நெடுந்தீவு செல்ல அனுமதித்தனர்.

அவர்கள் பயணம் செய்த வள்ளம் நெடுந்தீவுக்கரையை அண்மித்த சமயம் திடீரென வள்ளத்தை நோக்கி சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

இதனால் வள்ளத்தில் இருந்தோர் பீதியடைந்தனர். சிலர் உயிரைக் காப்பாற்ற கடலில் குதித்தனர்; சிலர் வள்ளத்துக்குள்ளேயே படுத்துக் கொண்டனர்.

படையினரின் துப்பாக்கிச் சூட்டில் வள்ளத்தில் இருந்த ஒருவர் பலியானார். எட்டுப்பேர் காயமடைந்தனர்.

இதேவேளை —

இச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதிக்கு முறையிடப்பட்டுள்ளதாகவும், —

சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் —

உயிரிழந்தவரதும், காயமடைந்தவர்களினதும் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்குமாறும் — கோரப்பட்டுள்ளது.

கூட்டணி தனித்து போட்டியிடும்

கொழும்பு, ஜூன் 29

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்துப் போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது;

கடந்த பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் சின்னத்தின்கீழ் தமிழ்க் கட்சிகள் இணைந்து தேர்தலில் போட்டியிட்டன —

எதிர்வரும் தேர்தலில் இணைந்து போட்டியிடும் சூழ்நிலை இல்லை என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ)

நாடாளுமன்ற தேர்தலில் தோற்றால்

ஜனாதிபதி தேர்தலில் டி. பி போட்டியிடார்

கொழும்பு, ஜூன் 29

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோற்றால் அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என்று திரு விஜேதுங்க தமது நெருங்கிய சகாக்களிடம் கூறிவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது

இத்தகவலை சண்டே டைம்ஸின் அரசியல் செய்தியாளர் வெளியிட்டிருக்கிறார்.

நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பாக கடந்த 15ஆம் திகதி ஐந்து அமைச்சர்களுடனும் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி விஜேசுராவுடனும் கலந்துரையாடியதை அடுத்து — ஜனாதிபதி விஜேதுங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பாக அண்மையில் நியமிக்கப்பட்ட அமைச்சர்களுடன் ஜனாதிபதி கலந்தாலோசிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

சிறிசேனகூரே ஒதுங்குகிறார்

தேர்தலில் போட்டியிடமாட்டார்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என்றும் —

கட்சியின் வெற்றிக்காக உழைக்கப் போவதாகவும் அமைச்சர் சிறிசேன கூரே தெரிவித்திருக்கிறார்.

"எதிர்கால நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதில்லை என்ற முடிவை நான் பிரேமதாஸா ஜனாதிபதியாக இருந்த போதே எடுத்து விட்டேன் பிரேமதாஸாவிடமும் இதனைத் தெரிவித்திருந்தேன்

தேர்தல் பிரசார வேலைகளை பிரேமதாஸாவின் தொகுதியான கொழும்பின் மத்தியில் தாம் மேற்கொள்ளப் போவதாகக் கூறியுள்ள அவர் —

கட்சியில் இனி எந்த ஒரு பதவியையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

மேல் மாகாண பிரதம அமைப்பாளராக இருக்கும் படி டி.பி. விஜேதுங்கா விடுத்த அழைப்பை சிறிசேனகூரே நிராகரித்து விட்டார். (இ-எ)

தேசிய பட்டியல் மூலம் எம். பியாக அனுரா விருப்பம்

கொழும்பு, ஜூன் 29

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் மூலம் எம்பியாகும் விருப்பத்தை அனுரா பண்டாரநாயக்கா வெளியிட்டிருக்கிறார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என்று அவர் அறிவித்திருக்கிறார்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் இவர் கம்பஹா மாவட்ட எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

மனித உரிமைகளை மீறும் நாடுகளுக்கு ஆயுத உதவி

அமெரிக்கா மீது குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஜூன் 29

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வரும் நாடுகளுக்கு அமெரிக்கா ஆயுதங்களும் பணமும் வழங்கி வருவதாக அமெரிக்காவில் உள்ள சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிடம் இருந்து உதவிபெறும், மனித உரிமை மீறலில் ஈடுபட்டுள்ள 19 நாடுகளின் பெயர்களையும் இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல், எகிப்து, தென்கொரியா, துருக்கி, சவுதி அரேபியா, கொலம்பியா, பொலிவியா, பிரேஸில், சாட், இந்தோனேஷியா, கென்யா, குவைத். மலாவி, மொறொக்கோ, பெரு, பிலிப்பீன்ஸ், தாய்லந்து, ருனிஸியா, வெனிசூலா ஆகியவையே அந்நாடுகளாகும். (இ-எ)

மாவீரர் வீரவணக்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

தென்மராட்சிக் கோட்ட பளை மாவட்ட மாவீரர் வீரவணக்கக் கூட்டம் இன்று புதன்கிழமை இரவு 8 மணிக்கு இத்தாவில் பாடசாலையில் தென்மராட்சி மாவீரர் பணிப் பொதுமனைப் பொறுப்பாளர் திரு. விபுலன் தலைமையில் நடைபெறும். (உ)

ஏற்றத் தாழ்வற்ற சமநிலை பேணுவோம்
சீதனம் அழித்திடப் போர்க்கோலம் பூணுவோம்

மட்டக்களப்பு மாவட்டத்திலே கூடுதலான கட்சிகள் போட்டி

கொழும்பு, ஜூன் 29

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே கூடுதலான கட்சிகள் போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட எட்டு அரசியல் கட்சிகளும் இரு சுயேச்சைக்குழுக்களும் மட்டக்களப்புமாவட்டத்தில் போட்டியிட முஸ்தீபு செய்து வருகின்றன என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எப்., ரெலோ, புளொட், ஈ. பி. டி. பி, ஆகியவையே போட்டியிட உள்ள அரசியல் கட்சிகள் ஆகும்.

இத்தேர்தலில் ஈரோஸ் இயக்கம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு அளிப்பதா அல்லது சுயேச்சையாகப் போட்டியிடுவதா என்பது குறித்து ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இயக்கத்தைச்சேர்ந்த பசீர்சேகு தாவூத் முஸ்லிம் காங்கிரஸில் சேர்ந்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளராகவே அவர் தேர்தலில் போட்டியிடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

கனடாவில் வாழும் ஈழத்தமிழர் மத்தியில் விரக்தி மனப்பான்மை

அங்கு கொலைகள், தற்கொலைகள் அதிகரிப்பு

டொரண்டோ, ஜூன் 29

கனடாவில் வாழும் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் கொலை மற்றும் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது:

சமீபத்தில் இளம் பெண் ஒருவர் தனது எட்டு மாதக் குழந்தையைக் கொலைசெய்துள்ளார்.

கதவன் என்ற எட்டு மாதக் குழந்தையே சமீபத்தில் தாயாரினால் கொலை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் இலங்கைத் தமிழர்கள் அதிகமாக வாழும் டொரண்டோவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த குழந்தையின் தந்தையார் நிமாநேசன் எட்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இருந்து கனடா வந்து குடியேறினார்.

இரு வருடங்களுக்கு முன்னர் இலங்கை திரும்பி திருமணம் செய்து கொண்டு மீண்டும் கனடா திரும்பி இருந்தார்.

இக் குழந்தையின் மரணம் தொடர்பாக குழந்தையின் தாயாரான அமிகா நிமாநேசன் (வயது 29) கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தியே இக்கொலைக்குக் காரணம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கடந்த வருடமும் இரண்டு இலங்கைத் தமிழக் குழந்தைகள் கனடாவில் கொலைப்பட்டுள்ளனர்.

தற்கொலைச் சம்பவங்களும் கனடாவில் அதிகரித்து வருகின்றன.

கடந்த வருடம் விக்டர் சங்கர் என்ற இலங்கைத் தமிழர் தமது ஸ்போர்ட்ஸ் காரை 120 கிலோ மீற்றர் வேகத்தில் செலுத்தி வீதியில் மோதவிட்டு தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்படுகிறது.

கனடாவின் ஸ்காபுறோ என்ற இடத்தில் இலங்கை தமிழர் ஒருவர் ரயில் முன் பாய்ந்து தனது உயிரை மாய்த்துக் கொண்டார்.

மருமகளின் தொல்லை தாங்காது 75 வயது வயோதிபர் ஒருவர் 12 மாடிக் கட்டடத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்த சம்பவமும் ஸ்காபுறோவில் இடம்பெற்றுள்ளது.

கலாசார மாற்றம் கணவர்மார் வீட்டைக் கவனியாது இரவு பகலாக வேலைக்கு போவது உறவினர்களைப் பிரிந்திருத்தல் ஆகியவையே இலங்கைத் தமிழர் மத்தியில் விரக்தி அதிகரிக்கக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

சமஷ்டி அரசமைப்பில் என்ன தவறு உண்டு?

முஸ்லிம் காங்கிரஸ் அஷ்ரப் கேட்கிறார்

கொழும்பு, ஜூன் 29

சமஷ்டி அரசமைப்பு முறையில் என்ன தவறு உள்ளது? ஒற்றையாட்சி அரசமைப்பு முறை அவ்வளவு புனிதமானதா?

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் "சண்டே டைம்ஸ்"க்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

தொண்டமானுடன்சேர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த இனப்பிரச்சினைத் தீர்வு யோசனையில் சமஷ்டி அரசமைப்பு 'மணம்' வீசுகிறதே என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஒற்றையாட்சிஅரசமைப்பு முறையைக் காப்பாற்றும் முயற்சி இரத்தஆறு ஓடுவதில் முடிந்துள்ளது: இப்படி இரத்த ஆறு ஓடுவதை சமஷ்டி அரசமைப்பு முறை நிறுத்தும் என்றால், அது இரத்த ஆறுக்குக் காரணமான ஒற்றையாட்சி அரசமைப்பு முறையிலும் பார்க்க சிறந்தது தானே" — என்றும் அஷ்ரப் கூறினார்.

சோல்பரி அரசமைப்பு இந்த நாட்டை ஒற்றையாட்சி அரசு என்று கூறவில்லை;

தீர்வுக்கான அரசமைப்புத் திருத்தங்களில் இலங்கை சமஷ்டி அரசமைப்பு முறையைக் கொண்டது என்று கூறத் தேவையில்லை என்றும் அவர் கூறினார். (இ-எ)

போட்டிகளில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். நகர்ப்புற சுகாதார விழாவை ஒட்டி நடைபெற்ற போட்டிகளில் கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வித்தியாலயம் மேற்பிரிவு நாடகப் போட்டியிலும் கீழ்ப் பிரிவு பாட்டுப் போட்டியிலும் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளது. அத்துடன் இவ் வித்தியாசாலையின் ஆண்டு 10 மாணவிகளால் நடிக்கப்பட்ட "சுகாதாரப் பரிசு" எனும் நாடகம் பலரின் பாராட்டைப் பெற்றுள்ளது. (உ)

புலிகளின் குரல் வானொலியில்

1994 – 06 – 29

புதன் இரவு

★ 8-01 — கரும்புலிகள் தினத்தை முன்விட்டு சிறப்பு நிகழ்ச்சி

★ 8-10 — மேஜர் அழகன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "ஆதவனாய் ஒளிதந்த அழகன்"

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — கடற்புலி மேஜர் அழகன்/ தாகூர் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி— "கடலில் காவியம் படைத்த கடற்புலி மேஜர் அழகன்"

1994 – 06 – 30

வியாழன் காலை

★ 7-02 — மாவீரர் வணக்கம்

★ 7-15 — விடுதலை கீதங்கள்

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

விடுதலைப்புலிகளின் ராணுவ பலம் ஏற்படுத்திய அரசமைப்பு நெருக்கடி

வாக்களிப்பு நிலைய இணைப்புத் திட்டத்துக்கு எதிர்ப்பு

"வடக்கு - கிழக்கில் தேர்தல்; பல தடைகள் தாண்ட வேண்டியுள்ளது" — என்ற தலைப்பில் சண்டே ஐலண்ட் வார இதழில் தராகி எழுதிய கண்ணோட்டத்தில் இருந்து ...

நாடாளுமன்றத்தில் ஆசனங்களைப் பிடிப்பது ஆரம்பமாகி விட்டது.

கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்கள் நாடாளுமன்றத்துக்கு தங்களின் சிலரை எப்படியாவது அனுப்புவது என்று உறுதி பூண்டுள்ளன.

எப்படியாயினும் — வடக்கு - கிழக்கில் நிலைவரம் அபாயகரமானதாக உள்ளது.

வடக்கில் யாழ் மாவட்டம் மற்றும் வன்னித் தொகுதிகளின் பெரும்பான்மையான பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன.

தேர்தல்களை விடுதலைப் புலிகள் குழப்பக்கூடிய சாத்தியத்தை பெரும்பாலானோர் நிராகரிக்கவில்லை. அப்படி நடந்தால் இப்பிராந்தியத்தில் முழுத் தேர்தலும் ஒரு குழப்ப நிலையை அடையும். எனினும் அரசியல் சிறப்புரிமையை பெற வேண்டும் என்ற விருப்பம் ஒருவரையும் விட்டுவைக்கவில்லை.

கிரமமாக தமிழ் அரசியல் வட்டாரங்களில் இருந்து "அரசியல் தீர்வு" கோரி எழும் கோரிக்கைகள், அவ் வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் ஆசனங்களைப் பிடிக்க வேண்டிய அவசரத்தினால், மூலையில் போடப்பட்டு விட்டன.

இரு பிரச்சினைகள்

யாழ் மாவட்டம் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இது இரண்டு பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது.

ஒன்று காலவரையறையற்ற முறையில் தேர்தலை ஒத்திப்போட சட்டத்தில் இடமில்லை.

இரண்டாவது — தனது கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளை மீண்டும் தனது கட்டுப்பாட்டுக்குள் அரசு கொண்டு வரும் வரை அப்பகுதிகளில் தேர்தல்களை ஒத்திவைக்கக் கூடியதான திருத்தம் ஒன்றை நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தில் செய்வது அரசமைப்புக்கு முரணானதாக அமைகின்றது.

இந்த விஷயங்கள் எல்லாம் கடந்த 24ஆம் திகதி தேர்தல் ஆணையாளர் அறிக்கை தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டன. அக்கூட்டம் இம்மாதம் 29ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது ஆனால் நாடாளுமன்றம் கடந்த 24ஆம் திகதி கலைக்கப்பட்டது.

ஈ. பி. ஆர். எல். எப் கூட்டணி கவலை

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தேர்தல் நடத்தப்படும் என்று ஐ.தே.க. பொதுச்செயலாளர் காமினி விஜேசேகரா தெரிவித்திருப்பது தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஈ. பி. ஆர். எல். எப். அமைப்புக்களை கவலை கொள்ள வைத்துள்ளது.

7 ஆயிரத்துக்குக் குறைவான வாக்காளர்கள் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசங்களில் இருந்து 11 நாடாளுமன்ற உறுப்பினர்களை இராணுவ ஒத்துழைப்புடன் ஈ.பி.டி.பி. குழு அனுப்புவதற்கு வாக்களிப்பு நிலையங்களை ஒன்றாக சேர்ப்பது உதவும் என்பதுதான் இந்த அமைப்புக்களுக்கு முதல் கவலையாக உள்ளது.

வடக்கிலும் கிழக்கிலுமுள்ள கரைப்பகுதிகளிலும் வாக்களிப்பு நிலையங்களை கொத்தணி முறையில் ஒன்று சேர்த்து தேர்தல் நடத்துவது ஜனாதிபதித் தேர்தலின் போது சுதந்திரக்கட்சிக்கு பாரதூரமான அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.

இதனால் வாக்களிப்பு நிலையங்களை, தேர்தல் நடத்தப்பட முடியாத இடங்களிலிருந்து அகற்றி வேறிடங்களில் நிறுவி தேர்தல்களை நடத்துவது அரசமைப்புக்கு உட்பட்டதா என்பது நீதிமன்றத்தில் வாதாடப்பட வேண்டிய விஷயமாகின்றது.

தேர்தல் வாக்களிப்பு நிலையங்களை ஒன்றாக்குவது நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் 2 ஆம் உபபிரிவில் கூறப்பட்டுள்ளது.

அரசமைப்பில் 4 ஆவது ஷரத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பிரஜையினதும் வாக்குரிமையை இச்சட்டவிதி மீறுவதாக உயர் நீதிமன்றத்தில் வாதாட முடியும்.

இதனை உயர் நீதிமன்றம் ஏற்றால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிராந்தியத்தில் தேர்தல்கள் நடத்தப்பட முடியாது. அப்படி விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் தேர்தலை நடத்தாமல் விடுவது மறுபுறத்தில் அரசமைப்புக்கு முரணான விஷயமாகின்றது.

சட்டத்தில் இந்த முரண்பாட்டு நிலையை விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமை ஏற்படுத்தி இருப்பதை நாம் பார்க்க முடிகின்றது. சுதந்திரக்கட்சி என்ன செய்யப் போகிறது?

இவ்வாறு அக்கட்டுரையில் எழுதப்பட்டிருக்கிறது. (இ-எ)

எமது திட்டத்தை அரசு பரிசீலிக்கட்டும்

பின்னர் புலிகளுடன் நான் பேச முடியும்

தொண்டா கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 29 ஜனாதிபதி விஜேதுங்காவிடம் சமர்ப்பித்த இனப்பிரச்சினைத் தீர்வு யோசனை குறித்து விடுதலைப் புலிகளுடன் நான் பேசவில்லை. அதற்கு முன்னர் அரசு இந்த யோசனையை பரிசீலனை செய்ய வேண்டும்;

அமைச்சர் தொண்டமான் சண்டே ரைம்ஸ்"க்கு அளித்த பேட்டியில் முன் கண்டவாறு சொன்னார்.

"இந்த யோசனை பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது; எனவே விடுதலைப் புலிகளுக்கும் அது தெரிந்திருக்கும்.

"விடுதலைப் புலிகளும் அரசுப் படைகளும் யுத்த பேரிகைகளை எழுப்பிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் அரசு இந்த யோசனையை பரிசீலிக்க இணங்க வேண்டும்.

"இந்த யோசனையை அரசும், பின்னர் விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொண்டால் அரசு அனுமதியளிக்கும் பட்சத்தில் நான் யாழ். சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவேன்.

"எதுவும் சாத்தியமே அஷ்ரபின் உதவியுடன் முஸ்லிம் மக்களையும் தமிழர்களையும் ஒன்று சேர்த்துள்ளேன். எண்ணங்கள் மாறமுடியும்.

"தென்ஆபிரிக்காவில் ஒரே சண்டையும் குழப்பமுமாக இருந்தது. திடீர் திருப்பு முனை அங்கு ஏற்பட்டு அமைதி உருவாகியுள்ளது. இப்படி ஒரு மாற்றம் இங்கு ஏற்பட்டு சமாதானம் தோன்றாதா?

இப்படி தொண்டமான் கேட்டார்.

(இ-எ)

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டதாரிப் பிரிவு
யாழ்ப்பாணம்

விஞ்ஞான - கணித - பயிலுநர் ஆசிரியர்
போட்டிப் பரீட்சை

பாடங்கள்:
1. பொது உளச்சார்பு
2. பொது அறிவு

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை

பாடங்கள்:
1. பொது உளச்சார்பு
2. மொழித்திறன்

இப்பரீட்சைகளுக்கு தயார் படுத்தும் வகுப்புக்கள் 29-06-1994 புதன்கிழமை 3-30மணிக்கு ஆரம்பம்

முழுக்கட்டணம் ரூபா 200 மட்டும்

விவரங்களுக்கு:

யாழ்ப்பாணக் கல்லூரி,
பட்டதாரிப் பிரிவு,
464, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

[ஒ-8300]

மரண அறிவித்தல்

திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம்

காங்கேசன்துறை, குருவீதியைச் சேர்ந்த பொன்னம்மா சுப்பிரமணியம் 21 - 06 - 1994 இல் கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலம்சென்ற சங்கரப்பிள்ளை நாகம்மா ஆகியோரின் ஏகபுத்திரியும், காலம்சென்ற சுப்பிரமணியத்தின் (தொலைத் தொடர்பு அலுவலகம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற நவமணிதேவியின் அன்புத் தாயாரும் சுப்பிரமணியம் இராசகோபாலின் (இலங்கை புகையிரதப் பகுதி) அன்பு மாமியாரும் சுரேந்திரன் (லண்டன்), சரனுபா (கொழும்பு), சஜீவன் (யூனியன் கல்லூரி), சுயந்தன் (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பு கனத்தை மயானத்தில் 22 - 06 - 1994 இல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. ஈசன்
(பேறாமகன்)

பலாலிவீதி,
திருநெல்வேலி.

(31670)

செல்வி. வசந்தி சண்முகநாதன்

"மலர்வாசம்" டச் வீதி, உடுவில் மேற்கைச் சேர்ந்த செல்வி. வசந்தி சண்முகநாதன் காலமானார்.

இவர் ஓய்வு பெற்ற தொலைத் தொடர்பு இலாகா உத்தியோகத்தர் திரு. பொ. சண்முகநாதன் திருமதி. ச. இராசமணி அவர்களது அருமை மகளும், நிர்மலாதேவி, இராஜநாதன், ரவீந்திரநாதன், ரங்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆனந்த சோமநாதன், வசந்தி, நளினி, ஆகியோரின் மைத்துனியும், திருமதி செல்லையா தங்கம்மாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
செ. திருநடராஜா
(மாமன்)

(31669)

திருமதி பரமேஸ்வரி தம்பித்துரை

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 655. K. K. S வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி பரமேஸ்வரி தம்பித்துரை நேற்றுக் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற தம்பித்துரையின் மனைவியும் காலஞ்சென்ற கா. குழந்தைவேலு, தெய்வானைப்பிள்ளை தம்பதியின் மகளும், பத்மநாதன் (கொழும்பு), திருமதி பா. ரஞ்சிதமலர் (ஆசிரியை யாழ்/ பெரியபுலம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ப. மகேஸ்வரி, கே. பாலச்சந்திரன் (ஈழநாதம்) ஆகியோரின் மாமியாரும், சுஜேன், காளினி, ஆர்த்தி ஆகியோரின் பேர்த்தியும், மு. சிவபாக்கியம், கு நாராயணசாமி (ஆசிய அபிவிருத்தி வங்கி, மணிலா) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 3 30 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
ரஞ்சிதமலர் பாலச்சந்திரன்
(ஆசிரியை) (மகள்)
655 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(31674)

தெரிவுக்குழு யோசனையே ஐ.தே.கவின் தீர்வுத் திட்டம்

கொழும்பு, ஜூன் 29 இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு சிபார்சு செய்த யோசனைகள் அமுல் நடத்தப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவிக்க இருக்கிறது.

ஜனாதிபதி விஜேதுங்கா இம்மாத ஆரம்பத்தில் தமது நெருங்கிய ஆலோசகர்களுடன் நடத்திய மந்திராலோசனையின் போது இம்முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக நாட்டின் அரசமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களை மேற்கொள்வதில்லை என்று அப்போது தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அப்படியான மாற்றங்களைக் கொண்டுவர இப்போதைய போதாது என்றும் அச்சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர் என்றும் "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டிருக்கிறது (இ-எ)

வடக்கில் வாக்க...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அது தேர்தல் மோசடிகள் இடம்பெற உதவியது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் தேர்தலின் போது வடபகுதியில் வாக்களிப்பு நிலையங்களை ஒன்று சேர்த்து நிறுவ முனையும் போது இதே போன்ற நிலைமை ஏற்படும் என்று எதிரணிக் கட்சிகள் தெரிவித்துள்ளன (உ-எ)

தமிழ்க் குழுக்கள்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு.எம்.சிவசிதம்பரம் யாழ் மாவட்டத்திலும் திரு. வீ. ஆனந்தசங்கரி வன்னி மாவட்டத்திலும் —

திரு பி. யோசப் பரராஜசிங்கம், திரு. கிவபாலன் ஆகியோர் மட்டக்களப்பு மாவட்டத்திலும் —

மாவை சேனாதிராஜா அம்பாறை மாவட்டத்திலும் போட்டியிடுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது

பொது அணி ஒன்று உருவாகும் சாத்தியம் ஏற்படாதவிடத்து வடக்கு கிழக்கு மாகாணத்தில் தனித்துப் போட்டியிடப் போவதாக ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கமும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும் அறிவித்துள்ளது.

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்) (அ எ)

ஐ.தே கவுடன்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலில் தனித்துப் போட்டியிட இருப்பதாக தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக சுதந்திரக் கட்சிப் பிரசாரத் தலைவர் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடைபெற்றால் அத்தேர்தலில் ஐ. தே. கவை ஆதரிப்பது என்றும் —

அத்தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளர் வென்றால் அதன் பின் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐ. தே. கவுடனான கூட்டைத் தொடர்வது என்றும்—

அத்தேர்தலில் ஐ. தே. க. தோல்வியுற்றால் அதன் பின்னர் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது என்றும் இ. தொ. கா தலைமைப் பீடம் திட்டமிட்டிருந்ததாம்.

ஆனாலும்—

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைப் பார்த்து அதன் அடிப்படையில் ஆளும் கட்சியாக தொடர்ந்து ஐ. தே. க விளங்கினால் அதனுடன் கூட்டு வைக்கவும்—

அந்த வாய்ப்பு ஆளும் கட்சிக்கு கிடைக்காமல் போகும் சூழ்நிலை இருந்தால் தனித்துப் போட்டியிடவும் இ. தொ. கா. முடிவு செய்திருந்தது.

ஆனால் திடீரென ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த ஜனாதிபதி விஜேதுங்கா அறிவித்திருப்பது இ. தொ. காவை திரிசங்கு நிலைக்குத் தள்ளி இருக்கிறது. இந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐ. தே. க. ஆளும் கட்சியாக வருமா அல்லது எதிர்க்கட்சி ஸ்தானத்தில் போய் அமருமா என்று தெரியாத நிலையில் அந்தக் கட்சியின் [illegible] போட்டியிட இ. தொ. கா. பயப்படுவதாக [illegible]றது. (உ-இ-எ)

சுதந்திரக் கட்சியை இனவாத கட்சியாக காட்டிய அறுவர்

அவர்களின் வெளியேற்றம் கட்சிக்கு லாபம் என்கிறார் தர்மசிறி

கொழும்பு, ஜூன் 28 சுதந்திரக்கட்சியை இனவாதக் கட்சியாகக் காட்டிக் கொண்டிருந்த ஆறு எம்பிக்கள் விலகியதால் கட்சி மேம்பாடடைந்துள்ளது

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா பிபிஸி சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

சுதந்திரக்கட்சி இனவாதக் கட்சியல்ல அமரர் பண்டாரநாயக்கா பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் நியாயம் வழங்கும் கொள்கையைக் கொண்டிருந்தார் ஆனால் சிலர் தமது சொந்த லாபங்களுக்காக சுதந்திரக் கட்சியை சிங்களப் பௌத்தர்களின் கட்சியாகக் காட்டிக் கொள்ள முயற்சித்தனர்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவே தொடர்ந்தும் எமது தலைவியாவார் எனினும் தேர்தல் பணிகளில் அவருக்குப் பதிலாக திருமதி சந்திரிகா ஈடுபடுவார்.

தேர்தல் பிரசாரத்தில் சந்திரிகா வல்லவர் சிறிமாவின் ஆசீர்வாதம் மற்றும் ஒத்துழைப்புடன் சந்திரிகா தேர்தலை நடத்துவார் இருவருக்கும் இடையே எதுவித முரண்பாடும் இல்லை என்றும்—அவர் கூறினார். (இ எ 6)

ஹேமா...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் என்னிடம் உள்ளன. எதிர்காலத்தில் இவற்றை மக்களுக்குத் தெரிவிப்பேன்- என்று ஒபேவன்ஸ குறிப்பிட்டுள்ளார். (ஒ-எ-6)

தமிழர்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரோதக்குழுக்களும் அங்கம் வகிப்பதாகவும் — அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இலக்கம் இல்லாத வாகனங்களில் சிவில் உடையில் வந்து தமிழர்களை கடத்திச் செல்லும் சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

வடக்கில் தேர்தல்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருவதில் உள்ள அரசமைப்புச் சிக்கலை, அரசமைப்பு விவகார அமைச்சர் கே. என். சொக்ஸி அங்கு விளக்கினார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டிசில்வா கருத்து வெளியிடுகையில் —

வடக்கில் இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்களை ஒன்றாக அமைத்து தேர்தலை நடத்துவது சாத்தியம் என்று தெரிவித்தார்

ஈ. பி. ஆர். எல். எவ்வைச் சேர்ந்த எம்.பியான சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனைத் எதிர்த்தார்.

தெரிவுக்குழு 29-6 94 இல் கூடும் போது இப்பிரச்சினை குறித்த அபிப்பிராயங்களை முன்வைக்கும்படி பிரதமர் கேட்டுக்கொண்டார்

அதன் பின்னர் நாடாளு[illegible]டதால் தெரிவுக்குழு இனிக் [illegible]டுள்ளது. (உ-எ)

வளைகுடா யுத்தம்

பாதிக்கப்பட்ட இலங்கையருக்கு அடுத்த மாதம் முதல் நட்டஈடு

கொழும்பு, ஜூன் 29 வளைகுடா யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையருக்கு நட்டஈடு வழங்குவது எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

36 பேருக்கு முதலில் நட்டஈடு வழங்கப்படவிருக்கிறது.

வளைகுடா யுத்தத்தின் போது குவைத்தில் 93 ஆயிரம் இலங்கையர் வேலை செய்து வந்தனர். அவர்களில் 60 ஆயிரம் பேர் யுத்தம் காரணமாக நாடு திரும்பி விட்டனர். அவர்களுக்கு 85 கோடி ரூபா நட்டஈடாக வழங்கப்படவுள்ளது.

இப்பணத்தில் 55 லட்சம் ரூபா முதல் தொகுதியாக இலங்கைக்குக் கிடைத்துள்ளது.

ஒரு லட்சத்து 45 ஆயிரம் ரூபா முதல் 5லட்சம் ரூபா வரை நட்டஈடு வழங்கப்படவுள்ளது.

66 விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த ஐ. நா. நட்டஈட்டுக்குழு 36 பேரையே நட்டஈடு பெறத் தகுதியானவர்கள் என்று முடிவு செய்துள்ளது.

(இ-எ)

புலிகளுடன் பேசி பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள்

முன்னாள் எம்.பி. நவரத்தினம் கோருகிறார்

கொழும்பு, ஜூன் 28 கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளுடன் பேசாவிட்டாலும் விடுதலைப்புலிகளுடன் பேசியாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் முன்வரவேண்டும்.

யாழ் மாவட்ட முன்னாள் எம், பி. வே நவரத்தினம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியாவில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். பிரச்சினை உள்ளவர்களோடு பேசி பிரச்சினையை அரசு தீர்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

கல்மடுவில் புதிய பாடசாலை திறப்பு

கிளிநொச்சி, ஜூன் 29 கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கல்மடு பட்டினத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலை நாளை வியாழக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இப்பாடசாலையின் அதிபர் திரு சு இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. சி கமலநாதன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கண்டாவளைப் பிரதேசச் செயலர் செல்வி குன்னமயில், கிளி. கிழக்கு பகுதிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு த மூர்த்தி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)

உபகரண கண்காட்சி

யாழ்ப்பாணம் ஜூன் 29 தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு இரண்டில் கற்பிக்கும் ஆசிரியர்களால் உருவாக்கப் பெற்ற உபகரணக் கண்காட்சி நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மருதனாமடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரியில் நடைபெறும்.

யாழ் கல்வி வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கண்காட்சியைத் திறந்துவைப்பார்.

தேசிய கல்வி நிறுவனத்தின் ஆண்டு 2 புதிய பாடத்திட்டத்திற்கமைவாக உருவாக்கப் பெற்ற கற்பித்தல் உபகரணங்கள் இக் கண்காட்சியில் இடம் பெறுமென்றும்—

ஆசிரியர்கள் இக் கண்காட்சியை இலவசமாகப் பார்வையிடலாமெனவும் கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தெரிவித்தார். (இ)

பெருமாள் திருமலையில் போட்டி!

கொழும்பு ஜூன் 29 வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அ வரதராஜப்பெருமாள் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

பல்கலைக் கழக கத்தோலிக்க ஒன்றியம்

மூன்று நாட்கள் நடத்தும் ஆயத்த வழிபாடு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூன் 29 யாழ். பல்கலைக் கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நாளை வியாழன் முதல் மூன்று நாட்களுக்கு நல்லாயன் நிலையத்தில் ஆயத்த வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

"இன்றைய இளைஞர் முகம் கொடுக்கும் பிரச்சினைகள்" என்ற பொருளில் அருட் தந்தை எஸ். ஈ. றெஜினோல்ட்டும் (அ. ம. தி)—

"பல்கலைச் சூழலில் இளைஞர் சந்திக்கும் சவால்கள்" என்ற கருப்பொருளில் அருட் தந்தை ரீ ஜெ கிருபாகரனும்—

"சமூகத்தில் எதிர்நோக்கும் நெருக்கடிகள்" என்ற கருப்பொருளில் அருட் தந்தை ஜெறோம் டெ பேட்டும் (அ. ம. தி.) முறையே மூன்று நாட்களும் வழிபாட்டினை வழி நடத்தவுள்ளனர்.

நிறைவு நாள் நிகழ்ச்சிகள் எதிர்வரும் 3 ஆம் திகதி நடைபெறும். யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் அருட் தந்தை எஸ். ஜே இம்மானுவேல் திருவிழா திருப்பலியினை நிறைவேற்றுவார்.

(ஒ-3-9)

சிரமதானம்

கைதடி ஆசிரியர் தமிழ்க் கலவன் பாடசாலையை மீண்டும் திறப்பதற்கான முன் முயற்சி சிரமதான வேலைகள் நாளை புதன் காலை முதல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பினரும் தென்மராட்சிப் பகுதி மக்களும் இச்சிரமதானத்தில் கலந்து கொள்வர். (ஒ-117)

இசை, நடன, சித்திரக்கலை

ஆசிரியர் பதவி பரீட்சை; சனியன்று நடைபெறும்

கீழைத்தேச இசை, நடன மற்றும் சித்திரக்கலை உதவி ஆசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்களும், அனுமதி அட்டைகளும் பரீட்சைத் திணைக்கள அதிகாரியால் விமான மூலம் நேற்று எடுத்து வரப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டுவிட்டன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் வலயம் 1 கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் செல்வி. இ பெரியதம்பி அறிவித்துள்ளார். விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஒ-3-173)

கல்வி அமைச்சு சமர்ப்பித்துள்ள

ஆசிரிய சேவை நகல் திட்டம் தொழிற் சங்கங்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29 கல்வி அமைச்சினால் ஆசிரிய தொழிற் சங்கங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆசிரிய சேவை தொடர்பான நகல் திட்டம் ஆசிரிய சங்கங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் சங்க பிரதிநிதிகளும் அமைச்சு அதிகாரிகளும் ஏற்றுக் கொண்ட 5 திட்டத்தை அமுல்படுத்துமாறு ஆசிரிய சங்கங்கள் கோரியுள்ளன;

தற்போது கல்வி அமைச்சின் அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டமானது 80 விதமான ஆசிரியர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற மாட்டாது. விசேடமாக பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத ஆசிரியர்களின் சம்பளத்திட்டம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு சேவைமூப்பு மூலம் இயல்பாகவே கிடைக்க வேண்டிய பதவி உயர்வு முறை தற்போதைய நகல் திட்டத்தில் நீக்கப்பட்டமையும், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விசேட பதவிகளுக்கு பதவி உயர்வு பெற முடியாத நிலை மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய தொன்றாகும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளரால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சினால் தற்போது தயாரிக்கப்பட்ட நகல் திட்டத்தில் ஆசிரியர்கள் ஏழு வகையினராக பிரிக்கப்பட்டுள்ளனர் ஆசிரிய வகையினரை 5 பகுதியினராகப் பிரித்து அது 1995 இல் நான்கு வகையாகவும் இரண்டாயிரமாம் ஆண்டில் 3 வகையினராகவும் அமையக் கூடிய திட்டத்தையே முன்னர் ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தது. ஆசிரியர் சமூகத்தை பல கூறுகளாகப் பிரிப்பது ஆரோக்கியமானதல்ல என்றும் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

புதிய ஆசிரியர் சேவைத் திட்டத்தில் இணைக்கப்படும் போது சேவை மூப்பு அடிப்படையின் படி உயர்ச்சிவழங்கி சம்பளம் மாற்றியமைக்கப்படும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

[ஒ-162]

இப்பத்திரிகை திரு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இல் உள்ள அச்சகத்தில் 29 06-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.